


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 174 குரோதி வருடம், மாசி மாதம் 08ஆம் திகதி வியாழக்கிழமை
(20.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 21, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12







# பட்டப்பகலில் பயங்கரம்!



## நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டில் கனேமுல்ல சஞ்சீவ படுகொலை

## துப்பாக்கிதாரி தப்பிக்க முயன்றபோது கைது

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்று புதன்கிழமை (19) இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ உயிரிழந்தார். சட்டத்தரணி வேடத்தில் நீதிமன்றத்துக்குள் நுழைந்த துப்பாக்கிதாரி ஒருவரினால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. » 02 பக்கம்

## மித்தெனியவில் மூவர் படுகொலை



» 02பக்கம்

## நீதிமன்றுக்குள்ளும் மரண பயம்

### சஜித் பிரேமதாச கண்டனம்



நாட்டில் இன்று சட்டம், ஒழுங்குத் துறையில் பாரிய பிரச்சினை ஏற்பட்டு கொலைகள் இடம்பெற்று வருவதாகவும் சிறுபிள்ளைகள் கூட மரணிப்பதால் இதையும் விட பலமான தீர்வை அரசாங்கம் வழங்கவேண்டுமெனவும் அதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கத் தயாரெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (19) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நீதிமன்றத்தினுள் கூட பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. » 02 பக்கம்

## நீதிமன்ற வளாகத்துக்குள் துப்பாக்கியுடன் வந்த பெண்

### விசேட தகவல் வெளியாகியது



கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது,

சட்டத்தரணியாக வந்த பெண்ணொருவர் துப்பாக்கிதாரியுடன் சம்பந்தப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரும் வழக்கறிஞர் வேடமணிந்து, நீதிமன்றத்துக்குள் வெறுங்கையுடன் நுழைந்து, பின்னர் சம்பந்தப்பட்ட பெண்ணிடமிருந்து... » 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

நல்லா தமிழ் படம் பார்க்கிற ஒருத்தன் தான் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை பிளான் பண்ணியிருக்கக் கூடும்...



## உள்ளூராட்சி தேர்தலை விரைவுபடுத்த வேண்டும்!

### தே.ம.ச. வலியுறுத்து



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முடிந்தளவு விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு... » 04 பக்கம்

## 24 மணிநேர கடவுச்சீட்டு விநியோகம்




» 02பக்கம்

## உஷ்



ஜப்பான் தூதரகத்தில் விசேட நிகழ்வொன்று நேற்று முன்தினம் நடந்தது.

அதில் முக்கிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு மேசைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அமர்ந்திருந்த மேசையில் அவர் மட்டுமே அமர்ந்திருக்க வேண்டிய நிலை இருந்ததாம். எவரும் அவர் அருகில் சென்று அமரவில்லையாம். அவருடன் பேச்சுக் கொடுத்தோர் கூட சற்று தள்ளியே இருந்தனராம்.

எப்படி இருந்த கோட்டாபய இப்படி...? என்று அங்கிருந்தோர் பேசிக்கொண்டனராம்.

## அதிகாரத்துக்காக இறையாண்மையை திருடிவிட்டார்கள்

### அரசாங்கம் மீது விமல் வீரவங்ச குற்றச்சாட்டு



"தேர்தல் காலப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகள் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அதிகாரத்துக்காக பொய்கூறி மக்களின் வாக்குகளையும் இறையாண்மை... » 02 பக்கம்




## தேர்தல் தினத்தை அறிவிப்பதில் சிக்கல்

### கட்டுப்பண ரசீதுகளை ஒருவாரத்தில் சமர்ப்பிக்குமாறு கட்சிகளுக்கு ஆலோசனை

கே. சுபானி

» 02 பக்கம்





தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி. நேற்றைய தினம் (19) தமிழ் நாடு தி.மு.க தலைமையகத்தில் சந்தித்தார்.

# மரக்கறிகளின் விலை திடீர் அதிகரிப்பு

சந்தையில் கரட், போஞ்சி, கோவா, கத்தரிக்காய் மற்றும் பச்சை மிளகாய் உள்ளிட்ட மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி சந்தையில் ஒரு கிலோகிராம் கரட் 1,250 ரூபாவுக்கும் கறிமிளகாய் ஒரு கிலோகிராம் 1,590 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் கத்தரிக்காய் 900ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1,650 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஒரு கிலோகிராம் போஞ்சி 600 ரூபாவுக்கும் கோவா ஒரு கிலோகிராம் 440 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் தக்காளி 360 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் பீர்க்கங்காய் 580 ரூபாவுக்கும் புடலங்காய் ஒரு கிலோகிராம் 420 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் லீக்ஸ் 390 ரூபாவுக்கும் பீட்ரூட் ஒரு கிலோகிராம் 520 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் ஒரு கிலோகிராம் இஞ்சி 1,800 ரூபாவுக்கு விற்பனையாகின்ற அதேவேளை ஒரு கிலோகிராம் தேசிக்காய் 170 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

கொழும்பு மெனிங் சந்தையில் ஒரு கிலோகிராம் போஞ்சி 350 ரூபாவுக்கும் கரட் ஒரு கிலோகிராம் 800 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் கோவா 300 ரூபாவுக்கும் தக்காளி ஒரு கிலோகிராம் 150 ரூபாவுக்கும் கத்தரிக்காய் 550 ரூபாவுக்கும் பச்சை மிளகாய் 1,500 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் அதேவேளை ஒரு கிலோகிராம் தேசிக்காய் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மித்தெனியவில்...

தனது குழந்தைகள் இருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவரை இலக்கு வைத்து இனந்தெரியாத குழுவினரால் நேற்று முன்தினம் (18) இரவு, மித்தெனிய சந்தியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் தந்தை மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரின் மகள் ஆகியோர் உயிரிழந்துள்ளதுடன் உயிரிழந்தவரின் மகன் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக மித்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீரகெட்டிய, மீகஸ்ஹார பிரதேசத்தைச் சேர்ந்த கஜ்ஜா என்ற புனைப்பெயரில் அழைக்கப்படும் அருண விதான கமகே என்பவரும் அவரின் 06 வயது மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாரதூரமான காயங்களுக்குள்ளான உயிரிழந்த நபரின் மகன் (09 வயது) எம்பிலிப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி பொது வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அவர் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் நேற்று (19) உயிரிழந்துள்ளார்.

தங்காலை வலய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல செனவிரத்னவின் வழிகாட்டலில் பொலிஸ் குழுக்கள் சிலவற்றால் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், ரீ-56 வகையைச் சேர்ந்த துப்பாக்கியினால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளமை பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன் இந்த சம்பவத்தில் துப்பாக்கிதாரிகளினால் இலக்கு வைக்கப்பட்ட 39 வயது கஜ்ஜா என்றழைக்கப்படும் அருண விதானகமகே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்பதுடன் அவரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## நீதிமன்றுக்குள்ளும்...

ஒருவர் மரண பயத்துடன் நீதிமன்றத்துக்கு செல்வார் என்றால் அது பாரிய பிரச்சினை. அதனால் இது குறித்து அவதானத்தை செலுத்தி வலுவான தீர்மானங்களை எடுக்க வேண்டும். சமூகத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறக்கூடாது. சட்டம் ஒழுங்கை பலப்படுத்தும் அதிகாரமும் அரசுக்கு உள்ளதால், இவற்றை தடுத்து நிறுத்தி உடனடியாக இது தொடர்பாக விசேட அறிவிப்பினை வெளியிட வேண்டும் - என்றார்.

## அதிகாரத்துக்காக...

அதிகாரத்தையும் திருடி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிக பெரிய ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது'' என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான செய்தியாளர் சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (19) இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு அரசாங்கம் முன்வைக்கும் வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையிலேயே அந்த அரசாங்கத்தின் பயணப்பாதை உறுதிப்படுத்தப்படுகிறது. அதனடிப்படையில் கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தேசிய மக்கள் சக்தியின் கன்னி பாதீடாகும்.

அநுரகுமார திசாநாயக்கவின் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சமூக பொருளாதாரத்தை முன்னெடுப்பதற்கான ஒரு ஏற்பாடு கூட இடம்பெற்றிருக்கவில்லை. தவறான பொருளாதாரக் கொள்கையிலிருந்து நாட்டை மீட்க புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதாக கூறினார்கள். பழைய அரசாங்கங்களை விமர்சித்துவிட்டு அந்த அரசாங்கங்கள் பின்பற்றிய அதே கொள்கையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதென்றால் அது எவ்வாறு புதிய பயணப் பாதையாக கருத முடியும். அது புதிய சமூக பொருளாதார வேலைத்திட்டமாகும். அது எவ்வாறு மாற்று சமூக பயணமாக இருக்கும்.

தேசிய மக்கள் சக்தியின் புதிய நோக்கெல்லையை நோக்கி பயணம், புதிய பொருளாதார வேலைத்திட்டம் எதுவும் இதில் உள்ளடக்கப்படவில்லை. இந்த பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் அளவுருக்களுக்கமைய தற்போதைய அரசாங்கம் வரவு - செலவுத்திட்டத்தை முன்வைத்துள்ளதால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் பயணப்பாதையில் மாற்றம் ஏற்படவில்லை என்று மத்திய வங்கியின் ஆளுநரே கூறுகின்றார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்த வரவு - செலவுத் திட்டத்தால் மகிழ்வடைந்திருப்பார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அளவுருக்களை போற்றும் வரவு - செலவுத் திட்டத்தால் இந்த நாட்டை மீட்க முடியாது. ஏதாவதொரு முறையில் அரச வருமானத்தை அதிகரித்துக்கொண்டு 13 சதவீதத்துக்கு அப்பால் அதனை செலவு செய்ய முடியாவிட்டால், அரசாங்கத்தின் முதலீடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அடுத்தகட்டமாக இவர்கள் தனியார் மயப்படுத்தலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

முதலாவது வரவு - செலவுத் திட்டத்திலேயே பாடசாலை புத்தகங்களுக்கான வரியையும் மருத்துவப் பரிசோதனைகளுக்கான வரிகளையும் மருந்துகளுக்கான வரியையும் நீக்குவோம் என்று கூறினார்கள். ஆனால் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அவ்வாறான எவ்வித யோசனையும் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறெனில் மக்களிடம் திருடுவதை விட, வாக்குகளுக்காக பொய்கூறி மக்களின் வாக்குகளையும் இறையாண்மை அதிகாரத்தையும் திருடுவது மிகவும் அபாயகரமானது.

அதிகாரத்துக்காக ஆசிரியர்களையும் தொழிலாளர்களையும் ஏமாற்றியுள்ளார்கள். அதனூடாக அதிகாரத்தை பெற மாத்திரமே முயற்சித்துள்ளார்களே தவிர வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான எந்த ஏற்பாடும் தேசிய மக்கள் சக்தியிடம் இருந்திருக்கவில்லை'' என்றார்.


**வாகன சந்தை — நாரம்மல**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BIP-33xx | BAJAJ | CT 100 |
| NW BHN-62xx | BAJAJ | CT 100 |
| NW BBB-47xx | BAJAJ | CT 100 |
| NW BFJ-30xx | BAJAJ | CT 100 |
| NW BFU-88xx | BAJAJ | CT 100 |
| NW BCY-26xx | BAJAJ | CT 100 |
| NW BFQ 95xx | HONDA | DIO |
| NW BEU 41xx | HONDA | DIO |
| NW BGK-53xx | HONDA | DIO |
| NW BGZ 35xx | HONDA | DIO |
| NW BGP-38xx | HONDA | DIO |
| NW BGU-65xx | HONDA | DIO |
| NW BIT-25xx | HONDA | DIO |
| NW BEU-20xx | HONDA | DIO |
| NW BFF-64xx | HONDA | DIO |
| NW BFP-82xx | HONDA | DIO |
| NW BGR-08xx | HONDA | DIO |
| NW BGP-82xx | YAMAHA | RAY-ZR |

இடம்:—இல: 91, குருநாகல் வீதி, நாரம்மல.

பார்வையிடும் திகதி:—21.02.2025(காலை 8.30 முதல்10.30 வரை)

மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:—21.02.2025 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:—0774787096 பண்டார:—0710773722

துரிதஅழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:— 0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

நிபந்தனைக்குட்பட்டது

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663


# தென்கொரிய தூதுவர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை சந்தித்தார்



கொரியக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் மியோன் லீ, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நேற்று முன்தினம் (18) பாராளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் வர்த்தகம், தொழில்நுட்பம், முதலீடு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுற்றுலா ஆகிய பிரதான துறைகளில் இரு தரப்புக்கும் இடையிலான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது தொடர்பில் சபாநாயகரும் தென்கொரிய தூதுவரும் கருத்துகளைப் பரிமாறினர். இந்தத் துறைகளில் ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதன் ஊடாக பரஸ்பர அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்துவதில் தமது உறுதிப்பாட்டை இருதரப்பினரும் மீண்டும் வலியுறுத்தினர்.

கொரிய குடியரசின் ஒத்துழைப்புடன் தற்பொழுது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தென்கொரியத் தூதுவர் மியோன் லீ விளக்கமளித்தார். இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு தென் கொரியாவின் தொடர்ச்சியான ஆதரவு இருக்கும் என்பதை உறுதிப்படுத்திய அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

## நீதிமன்ற வளாகத்துக்குள்...

துப்பாக்கியைப் பெற்றுக்கொண்டுள்ளார். பின்னர் சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கத் தயாரான கனேமுல்ல சஞ்சீவவை, குறித்த நபர் சுட்டுக் கொன்றுள்ளார்.

சட்டத்தரணிகள் பயன்படுத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் என்ற புத்தகத்தின் பக்கங்களை குற்றவாளிகள் மிக நுணுக்கமாக வெட்டி துப்பாக்கியை நீதிமன்ற வளாகத்துக்குள் கொண்டு வந்திருப்பது தெரிகிறது. இது தொடர்பான விசாரணைகள் கொழும்பு குற்றப்பிரிவு உட்பட 05 சிறப்புக் குழுக்களின் கீழ் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## தேர்தல் தினத்தை....

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை அந்தந்த வேட்பாளர்களுக்கும் கட்சிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கட்டுப்பணம் கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கட்டுப்பணத்தை வைப்புச் செய்த நபர்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் கட்டுப்பணம் மீளளிப்புச் செய்வதற்கான விண்ணப்பத்தை கடிதமொன்று அத்துடன் கட்டுப்பணம் வைப்புச் செய்துள்ள குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து ஆணைக்குழு நேற்று (19) வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2023ஆம் ஆண்டு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக கட்டுப்பணம் செலுத்திய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் வைப்புச் செய்யப்பட்ட வைப்புப் பணத்தை அந்தந்த வேட்பாளர்களுக்கும் கட்சிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி செலுத்தப்பட்ட கட்டுப்பணம் மீளளிக்கப்படுவதற்காக கட்டுப்பணம் கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கட்டுப்பணத்தை வைப்புச் செய்த நபர்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் கட்டுப்பணம் மீளளிப்புச் செய்வதற்கான விண்ணப்பத்தை கடிதமொன்று அத்துடன் கட்டுப்பணம் வைப்புச் செய்துள்ள குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பாக குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தால் குறித்த நபர்களுக்கு வைப்புப் பணத்தை மீளளிப்புச் செய்வதற்காக, தாமதமின்றி அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவித்துள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் தினத்தை அறிவிப்பதில் தடையிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை அந்தந்த வேட்பாளர்களுக்கும் கட்சிகளுக்கும் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்நடவடிக்கைகள் நிறைவடையும் வரை தேர்தல் நடைபெறும் தினத்தை அறிவிக்க முடியாதென தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 80,000க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில் அவர்களுக்கான கட்டுப்பணம் மீளளிக்கப்படவுள்ளது.

அதன்பின்னர் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனிடையே 2023ஆம் ஆண்டு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்காளர் அட்டைகளை அழிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## பட்டப்பகலில்...

துப்பாக்கிதாரி பயன்படுத்தியதாகக் கூறப்படும் ரிவோல்வர் ரக துப்பாக்கி நீதிமன்றத்தில் வைத்து கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேமுல்ல சஞ்சீவ 2023ஆம் ஆண்டு நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவின் கீழ் பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கு விசாரணைக்காக நேற்றைய தினம் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டபோதே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சட்டப்புத்தகம் ஒன்றினை ரிவோல்வர் அளவுக்கு வெட்டி ரிவோல்வரை உள்ளே வைத்து சட்டத்தரணி ஒருவரைப்போல வேடமிட்ட துப்பாக்கிதாரியே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை நடத்தியுள்ளார். நீதிமன்ற விசாரணைகள் நடைபெறும் இடத்துக்கு மிக அருகில் சென்று இந்த துப்பாக்கிச் சூட்டை துப்பாக்கிதாரி நடத்தியுள்ளார்.

துப்பாக்கி மறைக்கப்பட்ட சட்டப்புத்தகம்



துப்பாக்கிகளை இயக்குவதில் மிகவும் கைதேர்ந்த ஒருவரே இந்தச் சூட்டை நடத்தியிருக்கலாம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டை நடத்தி கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கிதாரி தப்பிச் சென்றுள்ளமை பாதுகாப்புத் தரப்பினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் முக்கியமான பிரமுகர்கள் வரும் நீதிமன்ற வளாகத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்தான விசாரணைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளன. சம்பவம் நடந்த கையோடு நீதிமன்ற வளாகத்தில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகளும் ஒரு மணி நேரம் இடைநிறுத்தப்பட்டன.

சம்பவம் நடந்த இடத்துக்கு நீதி பிரதியமைச்சர் சுனில் வட்டகல சென்றார். குற்றவாளிகளை கண்டுபிடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி புத்தளம், பாலாவி பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். 34 வயதுடைய மொஹமட் அஸ்மான் ஷெரிப்தீன் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். படகினூடாக தப்பிச் செல்ல முற்பட்டபோதே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# யார் இந்த கனேமுல்ல சஞ்சீவ?

கனேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்துக்குள் சினிமா பாணியில் கொலை செய்யப்பட்டார். யார் இந்த கனேமுல்ல சஞ்சீவ? கொழும்பின் பாதாள உலக கோட் பாதராக தன்னை நிலைநாட்டிக்கொள்ள முயற்சித்தவர். 30க்கும் அதிகமான கொலை சம்பவங்களில் கூலியாக செயற்பட்டதாக தகவல்கள் இருக்கின்றன.

திட்டமிட்ட ஒரு கும்பலோடு சேர்ந்து தனியார் வங்கியொன்றில் 07 கோடி ரூபா கொள்ளையிட்ட சம்பவத்தில் கைதானவர். சிறைக்குச் சென்ற சஞ்சீவ அப்போதைய கொழும்பின் பாதாள கோட் பாதர்களான 'புளூமெண்டல் சங்க, ஆர்மி சம்பத்' ஆகியோரது அடியாளாக வெளியில் வருகின்றார்.

அதன் பின்னர் கட்டம் கட்டமாக கொழும்பை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சஞ்சீவ முயற்சிகளை செய்தாலும் அதற்கு தடையாக தெமட்டகொட சமிந்த (பாதாள உலக உறுப்பினர்) தடையாக இருக்கிறார்.

எனவே சமிந்தவை கொலைசெய்ய சஞ்சீவ முயற்சி செய்தார். முதல் சம்பவமாக தெமட்டகொட இறைச்சிக்கடைக்கு முன்னால் வாகனத்தில் வந்து துப்பாக்கிச்சூடு நடத்தினார். ஆனால் சமிந்தவின் தம்பி ருவன் சஞ்சீவ முன்னால் வந்தார்.

அங்கே அவருக்கு தடையாக இருந்தவர்தான் எதிரிலிருந்து சஞ்சீவ வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதனால் இவர்களின் அடியாள் ஒருவர் உயிரிழந்தாலும் தெமட்டகொட சமிந்த உயிர் தப்பினார். இந்தச் சம்பவத்தின் பின்னர் சஞ்சீவ உட்பட்ட குழுவினர் போலி கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொண்டு டுபாய் சென்றனர். ஆனால் குறுகிய நாட்களுக்கு பின்னர் மீண்டும் சஞ்சீவ இலங்கை வந்தார். மீண்டும் சமிந்தவை கொலை செய்ய முயன்றார்.

பாரத் லக்ஷ்மன் கொலை வழக்கில் சமிந்த ஆஜராகி மீண்டும் சிறைக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை தெமட்டகொட பகுதியில் பாதை நடுவில் இடைமறித்து துப்பாக்கிச்சூடு நடத்தினர் இந்த சஞ்சீவ உட்பட அவரது குழு.

அங்கேயும் சமிந்த உயிர்தப்பிய நிலையில் குற்றவாளிகளை தேடி பொலிஸார் வலைவீச ஆரம்பித்தனர். குறுகிய காலத்துக்குள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர். அதில் இந்த சஞ்சீவவும் இருந்தார்.

மீண்டும் சிறைக்குச் சென்ற சஞ்சீவ கொழும்பை கைவிட்டுவிட்டு கம்பஹா மாவட்ட பாதாள செயற்பாடுகளை தனக்குக் கீழ் கொண்டுவர முயற்சி செய்தார்.

அங்கே அவருக்கு தடையாக இருந்தவர்தான் ஒஸ்மான். 2018 ஏப்ரல் மாதம் ஒஸ்மான் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தினார் சஞ்சீவ. அதற்காக தனது அடியாட்களான 'அஜா மற்றும் சூளா' ஆகியோரை பயன்படுத்தினார்.

இதுவே சஞ்சீவவின் சாதாரணமான பின்னணி. இவருடைய திட்டங்களின் அடிப்படையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கணக்கிலிட முடியாதவை. 30க்கும் அதிகம் என்று ஒருபுறம் சொல்லப்படுகிறது.

போதைப்பொருள் வியாபாரம், கப்பம் பெறுதல், கொலைகள் என்பவற்றை பகிரங்கமாக செய்த இவர் கடந்த செப்டெம்பரில் கைதுசெய்யப்பட்டார். இன்னுமொரு கொலைவழக்கு தொடர்பில் பூஸா சிறைச்சாலையில் இருந்து புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் இலக்கம் 05 நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு சாட்சியம் வழங்கிக் கொண்டிருந்தார்.

விசாரணைக்கூண்டில் நின்றுகொண்டிருந்த நிலையில்தான் சட்டத்தரணி வேடமணிந்த துப்பாக்கிதாரி துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். கூண்டுக்கு மிக அருகில் சென்றுதான் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரி அருகில் சென்றாலும் ஒருவேளை சஞ்சீவவின் சட்டத்தரணியாக இருக்கலாம் என்றே அநேகர் நம்பியுள்ளனர்.

## 24 மணிநேர கடவுச்சீட்டு...

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினூடாக 24 மணிநேர சேவையை வழங்க நேற்று (19) அதிகாலை முதல் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, கடவுச்சீட்டு விநியோகப் பணிகள் 24 மணிநேரம் முன்னெடுக்கப்படுமென்றும் நாளாந்தம் 4000 வரையிலான கடவுச் சீட்டுகளை விநியோகிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

18ஆம் திகதியிலிருந்து நாட்டிலுள்ள சகலராலும் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அவசர கடவுச்சீட்டு தேவையை பூர்த்தி செய்துகொள்ள இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும். கடவுச்சீட்டுக்கான தட்டுப்பாடு தொடர்பில் யாரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. இனிமேல் 24 மணிநேரமும் கடவுச்சீட்டு விநியோகம் இடம்பெறும்.

இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணத்திலும் குடிவரவு, குடியகல்வு அலுவலகத்தை திறக்கவும் எதிர்பார்த்துள்ளோம். எனவே, வடக்கிலுள்ள மக்கள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்புக்கு வரவேண்டியது அவசியமில்லை. அதேபோன்று ஏனைய அலுவலகங்களில் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக அதிகரிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

இரவு சேவைக்காக மேலதிக பணிக்குழாமை பணிக்கு இணைத்துக்கொள்ள பொது நிர்வாக அமைச்சுடன் கலந்துரையாடியுள்ளோம். இரவு நேரத்தில் புறக்கோட்டையிலிருந்து பத்தமுல்லைக்கு இலங்கை போக்குவரத்து சபை பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவும் தயாராக இருக்கிறோம். எனவே, இதுவரையில் இருந்த கடவுச்சீட்டு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

# வலுவான பொருளாதாரத்துக்கான முதல் அடியே 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம்

## கருத்தாடலில் ஜனாதிபதி தெரிவிப்பு



கடந்த அரசாங்கங்களின் தவறான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வங்குரோத்தடைந்த எமது நாடு, தற்போது சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட தகுதிகாண் காலத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்தச் சூழ்நிலையில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கையை இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தினூடாக எடுத்துள்ளதாகக் கூறினார்.

கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் நேற்று (19) நடைபெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்துக்குப் பின்னரான கருத்தாடல் (POST BUDGET FORUM 2025) இல் பங்கேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடன் மறுசீரமைப்பு மூலம் கிடைத்த மூன்று வருட சலுகைக் காலத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, 2028ஆம் ஆண்டுக்குள் சரியான பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் கடன் திருப்பிச் செலுத்தும் திறனையுடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வங்குரோத்தடைந்த ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பல உலக நாடுகளுக்கு ஒரு தசாப்தம் வரை சென்றாலும், இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்துக்கும் குறைவான காலமே செல்லுமென்று கணிப்பிட முடியும்.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1% ஆக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் நிதியைச் செலவிடுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரத்தை விஸ்தரித்து பொருளாதாரத்தை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதன் மூலமும் குடிமக்களைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கும் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தினூடாக கவனஞ்செலுத்தப்பட்டுள்ளது. இதனால் குடிமக்கள் பயனடையும் திறனை அதிகரிக்க முடியும்.

பொருளாதாரத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்ட குழுக்களை மீண்டும் பொருளாதாரத்துக்குள் கொண்டுவருவதன் மூலம் கிராம மட்டத்தில் சிறிய பொருளாதார அலகுகளை உருவாக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான ஆர்வத்தை நாட்டில் உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில்துறைக்கு உதவுவதே அரசாங்கத்தின் நோக்கமென்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குவதே அரசாங்கத்தின் குறிக்கோள் என்றார்.

கிராமப்புற வறுமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கல்விக்காக இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் பாடசாலைக் கட்டமைப்பில் மனித மற்றும் பௌதீக வளங்களை மறுசீரமைக்க எதிர்பார்ப்பதுடன், இது ஒற்றைத் திசைக் கல்விக்குப் பதிலாக பல்திசைக் கல்வியை உருவாக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் கவனஞ்செலுத்தப்பட்டுள்ளதோடு அரச சேவைக்காக அதிக செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அரச நிறுவனங்களின் செலவினங்களை மறுபரிசீலனை செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் அதிகாரத்தை ஊழலற்ற இடமாக மாற்றி இலஞ்சம் கொடுக்காத கலாசாரத்தை உருவாக்குவது குடிமக்களின் பொறுப்பாகும். ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

துறைமுக மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதில் அரசாங்கம் கவனஞ்செலுத்தியுள்ளது. இந்த ஆண்டு திறமையான கொள்கலன் பரிமாற்ற மையத்தை உருவாக்குவதில் வரவு - செலவுத் திட்டத்தினூடாக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக நகர வர்த்தக நாமத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதோடு அநுராதபுரம், யாபஹுவ மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நகரங்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களும் வகுக்கப்படுகின்றன'' - என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மாசி மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** உடல், மனம் சோம்பிக் காணப்படும். அவசர முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். கோபத்தைக் குறைத்துக்கொள்க.

**ரிஷபம்** விவாகப் பேச்சுகளால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். மனைவியால் சுகம் உண்டு.

**மிதுனம்** நீண்டநாள் நோயிலிருந்து விடுதலை கிடைக்கும். சத்துருக்களால் தன,பொருள் இலாபங்கள் உண்டு. கடனை அடைப்பீர்கள்.

**கடகம்** தொழில், வியாபார ரீதியான நட்டங்கள் ஏற்படும். குழந்தைகளால் செலவுகள் ஏற் படும். உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள்.

**சிம்மம்** யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள். எதிர்பாராத விபரீதங்கள் ஏற்படலாம். கவனம்.

**கன்னி** உங்கள் தேவைகளை சிரமமின்றி முடிப்பீர்கள். மனத்துணிவோடு செயற்படுவீர்கள். எதற்கும் தயங்கி பின்வாங்க மாட்டீர்கள்.

**துலாம்** கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது சிரமப்படுவீர்கள். மனத் தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படுவீர்கள்.

**விருச்சிகம்** மனத் தைரியத்துடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். குடும் பத்தில் சுப காரிய பேச்சுகள் நடைபெறும்.

**தனுசு** குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்துகொள்ளுங்கள். தேவையற்ற தொடர்பால் வீண் தொல்லைகளைச் சந்திப்பீர்கள்.

**மகரம்** உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தொழில், வியாபார முன்னேற்றம், இலாபங்கள் உண்டு. உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**கும்பம்** புதிய தொழில் முயற்சிகளில் நன்மைகள் உண்டு. குடும்பத்தாருடன் மகிழ்ச்சிப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**மீனம்** கடின உழைப்பால் உடல் அசதி. ஏதோ ஒருவித பயத்தால் வீண் டென்ஷன் உருவாகும். மாலையில் எல்லாம் சரியாகிவிடும்.

**திதி** : சப்தமி மு.ப.9.58 வரை பின் அட்டமி

**நட்சத்திரம்** : விசாகம்; பி.ப.1.30 வரை பின் அனுஷம்

**பிறை** : தேய்பிறை

**யோகம்** : சித்த யோகம் முழுவதும்

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : காலை- 9.22 – 12.22 மணி வரை. மாலை- 4.22 – 6.22 மணிவரை

**ராகு காலம்** : 1.52 – 3.22 மணிவரை

**எமகண்டம்** : 6.22 - 7.52 மணிவரை

**குளிகை** : 9.22 - 10.52 மணிவரை

**சந்திராஷ்டமம்** : மீன-மேஷ ராசியினர் எச்சரிக்கையாகச் செயற்படவும். (முற்பகல் 6.49 வரை மீன ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 1.30 மணிவரை**

பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 1.30 மணிக்குமேல்**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

## மாணவ குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதி

*(எம்.ஏ.அமீனுல்லா)*

ஹத்தரலியத்த தேசியப் பாடசாலை மாணவர் குழுக்களிடையே நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற மோதலில் காயமடைந்த மூன்று மாணவர்கள் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் பாடசாலைக்குள் இந்த மோதல் இடம்பெற்றதாகவும் பின்னர் பாடசாலை கலைந்த பின்னர் ஹத்தரலியத்த நகரில் மீண்டும் மோதலில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதல் சம்பவத்தில் பாடசாலையின் 13ஆம் தரத்தில் கல்வி கற்கும் இரு மாணவர்களும் சாதாரண தர மாணவரொருவரும் காயமடைந்தனர்.

மோதல் சம்பவத்தில் சிக்கிய முச்சக்கரவண்டிச் சாரதியொருவரும் காயமடைந்து ஹத்தரலியத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து ஹத்தரலியத்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சிறைச்சாலைக்குள் போதைப்பொருளை கொண்டுசெல்ல முயன்ற காவலர் கைது

*(எம்.ஏ.அமீனுல்லா)*

கண்டி, பல்லேகலயில் உள்ள தும்பற சிறைச்சாலைக்குள் ஹெரோயின், ஐஸ் மற்றும் ஹேஸ் போதைப்பொருட்களைக் கொண்டுசெல்ல முயன்ற சிறைச்சாலை காவலர் ஒருவர் சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக பல்லேகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது சிறைக்காவலர் நேற்று முன்தினம் (18) இரவு 11.00 மணியளவில் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவரிடமிருந்த 240 மில்லி கிராம் ஹெரோயின், 5,130 மில்லி கிராம் ஐஸ், 2,460 மில்லிகிராம் ஹேஸ் மற்றும் 1,110 மில்லிகிராம் புகையிலை என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைதிகளுக்கு கொடுப்பதற்காக சில காலமாக போதைப்பொருள் கடத்தல் செய்து வந்துள்ளமை தொடர்பில் பொலிஸ் உளவுத்துறையினர் சிறைச்சாலை பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கியுள்ள தகவலையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# “எமது ட்ரோன் பயன்பாடுகளை மேம்படுத்துவதில் இலங்கை வங்கி முக்கிய பங்காற்றியுள்ளது”

## இலங்கை வங்கியுடனான தனது கூட்டு முயற்சி உள்நாட்டு விவசாயத்தில் எவ்வாறான புரட்சியை ஏற்படுத்துகின்றது என்பது குறித்து அளித்த விளக்கம்



கெனில்வொர்த் இன்டர்நெஷனல் முகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த திசாநாயக்க

உலகெங்கிலும் பல்வேறு தொழிற்றுறைகளின் இயக்கத்தை ட்ரோன்களின் பயன்பாடு விரைவாக மாற்றி வருகின்றது. இலங்கையின் விவசாயத்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. கெனில்வொர்த் இன்டர்நெஷனல் ஆரம்ப காலங்களில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் கவனஞ் செலுத்திய ஒரு நிறுவனமாகும். இப்பொழுது இந்நிறுவனம் இலங்கையில் விவசாய செயற்பாடுகளில் ட்ரோன்களை அறிமுகப்படுத்துவதில் முன்னணி வகித்து வருகின்றது. இலங்கை வங்கியின் ஆதரவுடன் இந்நிறுவனம் அதன் செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளதுடன் செலவினங்கள், அணுகல் மற்றும் ஒழுங்குமுறையான கட்டமைப்புகள் தொடர்பான சவால்களையும் எதிர்கொண்டு அவற்றை வெற்றிகரமாக நிர்வகித்துள்ளது.

கெனில்வொர்த் இன்டர்நெஷனலின் தலைவர் காவிந்த திசாநயக்க நிறுவனத்தின் செயற்பாடுகள் எவ்வாறு விவசாயத்துறைக்கு மாறியதென்பது பற்றியும் நிதி ஆதரவு மற்றும் நெற்பயிர்ச்செய்கைக்கும் தேயிலைத்தோட்டங்களுக்கும் ட்ரோன் தொழில்நுட்பத்தின் அறிமுகத்தால் கிடைத்துள்ள உறுதியான நன்மைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடுகின்றார். விவசாயத்துக்கப்பால் விரிவாக்கத்துக்கான எதிர்காலத்திட்டங்களையும் அவர் இங்கு கோடிட்டுக் காட்டுகின்றார். அதேவேளை, அடுத்த தசாப்தத்தில் இலங்கையின் விவசாயத் துறையை வடிவமைப்பதில் தரவுகள் அடிப்படையிலான விவசாயத்தின் (Data-driven farming) பங்கையும் இங்கு வலியுறுத்துகின்றார்.

இந்த நேர்காணலில் நிறுவனத்தின் பயணம், ட்ரோன் செயற்பாடுகளின் நிதி பரிசீலனைகள் மற்றும் இலங்கையில் ட்ரோன் தொழில்நுட்பத்தின் எதிர்காலத் திறன்கள் நுண்ணறிவு பற்றி திசாநாயக்க கருத்துகளைப் பகிர்ந்துகொள்கின்றார். நேர்காணலின் சில முக்கியமான பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

**இலங்கையின் விவசாயத்தில் ட்ரோன் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த கெனில்வொர்த் இன்டர்நெஷனலை ஊக்குவித்தது எதுவென்றும், அதை ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்வதில் காணப்பட்ட பிரதான சவால்கள் பற்றியும் கூற முடியுமா?**

கெனில்வொர்த்.... இன்டர்நெஷனல் 2013இல் நிறுவப்பட்டதுடன், ஆரம்பத்தில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் கவனஞ்செலுத்தி வந்தது. ட்ரோன்கள் ஏற்கனவே எங்கள் பாதுகாப்புத் தீர்மானங்களின் ஒரு பகுதியாக இருந்தன. ஆனால், பின்னர் அவற்றின் பயன்பாட்டை விவசாயத்தில் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பை நாங்கள் அடையாளம் கண்டோம். சாத்தியமான நன்மைகளை அங்கீகரித்து விவசாய ட்ரோன் பயன்பாடுகளில் காலடி எடுத்து வைக்க இது சரியான நேரமென்று நாங்கள் முடிவு செய்தோம்.

**ட்ரோன்களின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு இலங்கை வங்கியின் நிதியுதவி எவ்வாறு பங்களிப்புச் செய்தது? அத்துடன், திட்டத்தின் எந்தெந்தப் பகுதிகள் இந்த முதலீட்டிலிருந்து அதிகம் பயனடைந்தன?**

தொழில்முறையில் ட்ரோன் விமானிகளுக்கு பயிற்சியளிப்பது முதலீட்டின் முக்கிய பகுதியாக அமைந்திருந்தது. ஒரு விமானிக்கு பயிற்சியளிப்பதற்காக சுமார் ரூ 5,00,000 தேவைப்படுகின்றது. ஏனெனில், புகைப்படமெடுத்தல் அல்லது வீடியோ எடுத்தல் போன்ற திறன்களை ட்ரோன்கள் கொண்டிருக்க வேண்டும். பாதுகாப்பான மற்றும் பயனுள்ள இயக்கமுறைகளுக்கு திறமையான இயக்குநர்களை உறுதி செய்வதும் அவசியம்.

மேலும், அதி நவீன ட்ரோன்களை வாங்குவதில் நாங்கள் அதிக முதலீடு செய்தோம். எங்கள் உபகரணங்களில் சில உலக சந்தையில் ஆறு மாதங்களுக்கும் குறைவானளவுக்கு மிகவும் நவீனமானவை. முதலீட்டின் மற்றொரு முக்கியமான பகுதி பொது விழிப்புணர்வாகும். விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு ட்ரோன்களை அவர்களின் விவசாய நடவடிக்கைகளில் எவ்வாறு ஈடுபடுத்துவதென்பது குறித்து அறிவுறுத்துவது இந்தப் பணியாகும்.

ட்ரோன்கள் இலங்கையில் புதியதொரு விடயமாக இருந்தமையால் அதற்கு எந்தவிதமான பெறுமதியும் மதிப்பும் முன்பு இருக்கவில்லை. இதனால் நிதியுதவிகளைப் பெறுவதும் பெரும் சவாலாக இருந்தது. இலங்கை வங்கி இந்த நிலையை உணர்ந்து, எங்கள் மூலதனத் தேவைகளுக்கு பகுதியளவு நிதியளிப்பதன் மூலம் அச்சவாலை ஏற்றுக்கொண்டது. இந்த ஆதரவு எங்கள் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது.

**மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் பயிற்சியுடன் தொடர்புடைய அதிக செலவினங்களைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, சிறு விவசாயிகளினால் ட்ரோன் தொழில்நுட்பம் அணுகக்கூடியதாகவும் மலிவாகவும் இருப்பதை எவ்வாறு கெனில்வொர்த் இனடர்நேஷனல் நிறுவனம் உறுதிசெய்யப் போகின்றது?**

வினைத்திறன் மிக்க செலவினம் ட்ரோன் தொழில்நுட்பத்தின் குறிப்பிடத்தக்க நன்மையாக அமைகின்றது. உதாரணமாக, விவசாயிகள் நெல்லை பொதுவாக கையால் விசிறுவதற்காக ஓர் ஏக்கருக்கு ரூ 2,500 முதல் 3,000 வரை செலவிடுகின்றார்கள். அதேசமயம், ட்ரோன்களின் பயன்பாட்டால் ஏக்கருக்கு சுமார் 1,060 ரூபாக்குள் இப்பணியை முடித்துக்கொள்ள முடியும். இவ்வாறு செலவு கணிசமானளவு குறைவாக இருப்பதால் விவசாயிகள் ட்ரோன்களை நோக்கி ஈர்க்கப்படுவதற்கு இது ஒரு காரணமாகியுள்ளது.

மேலும், இரசாயனங்களை தெளிப்பதற்கு செலவிடப்படும் நேரத்தை ட்ரோன்கள் கணிசமான அளவு குறைக்கின்றன. பாரம்பரிய முறைகளில் ஓர் ஏக்கரில் இரசாயன தெளிப்பு செயற்பாட்டுக்கு ஐந்து முதல் ஆறு மணி நேரம் வரை தேவைப்படுகின்றது. ஆனாலும், ட்ரோன்கள் அதே பணியை வெறும் 10 நிமிடங்களில் செய்துமுடித்து விடுகின்றன. மற்றொரு முக்கிய நன்மை என்னவென்றால், அபாயகரமான இரசாயனங்களை நேரடியாகக் கையாள்வதைத் தவிர்ப்பதால் விவசாயிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கின்றது.

மேலதிகமாக, ட்ரோன்கள் தரவைச் சேமித்துவைத்து பகுப்பாய்வு செய்கின்றன. விவசாயிகள் இரசாயனப் பயன்பாட்டைக் கண்காணிக்கவும் எதிர்கால பயன்பாடுகளை மேம்படுத்தவும் தரவுகள் சார்ந்து முடிவெடுப்பதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் உதவுகின்றன.

**நெல், தேயிலை மற்றும் பிற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளின் உற்பத்தித்திறன், செலவு குறைப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் ட்ரோன் தொழில்நுட்பம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?**

தேயிலைத்தோட்டங்களில் இதன் செல்வாக்கு பரவலாக உள்ளது. பசுந்தேயிலை விளைச்சலில் 30 சதவீதத்துக்கும் அதிகமான அதிகரிப்பு இதனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உற்பத்திப் பெருக்கம் காரணமாக தேயிலைத் தோட்டங்களில் ட்ரோன்களின் செயற்பாடுகள் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட வழிவகுத்துள்ளன.

இந்தத் தொழில்நுட்பத்தின் மதிப்பை அரசாங்கமும் அங்கீகரித்து வருகின்றது. சமீபத்தில் அரச பெருந்தோட்ட நிறுவனம் பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. தற்போது ட்ரோன்களை பொதுத்துறை விவசாயத்தில் ஈடுபடுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுகின்றது. ட்ரோன்களைப் பயன்படுத்தி இரசாயனங்களைத் தெளிப்பதனூடாக இரசாயன விநியோகத்தை பயிர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் விளைச்சலை அதிகரிப்பதற்கு ஏதுவாகவும் மாற்றிக்கொள்ள உதவுகின்றன.

**கெனில்வொர்த் இன்டர்நேஷனல் மற்றும் இலங்கை வங்கிக்கிடையிலான கூட்டு முயற்சிகள் இலங்கை விவசாயத்துறையில் ட்ரோன்களை பாரிய அளவில் ஏற்றுக்கொள்வதற்கு எவ்வாறான பங்களிப்பை வழங்கியுள்ளன?**

நாங்கள் ஏற்கனவே ஆரம்ப கட்டத்தை முடித்துவிட்டு விரிவாக்கத்துக்குத் தயாராகி வருகின்றோம். இலங்கை வங்கியுடனான எங்கள் ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் ஒன்று, ட்ரோன்களில் முதலீடு செய்ய விரும்பும் தனிநபர்களுக்கான கடன் திட்டங்களை வழங்குவதும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ட்ரோன்களைக் குத்தகைக்கு வழங்குவதுமாக அமைந்துள்ளது. இது வருமானத்தை ஈட்டுவதற்காக வாகனங்களைக் குத்தகைக்கு விடுவதற்கு ஒப்பானதாகும்.

மற்றொரு அணுகுமுறை, ட்ரோன் விமானிகளாக மாற விரும்பும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதாக அமைகின்றது. ட்ரோன்களை குத்தகைக்கு எடுப்பதனூடாக சேவைகளை வழங்குவதற்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பத்தை அணுகுவதற்கான எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் அவர்கள் எங்களுடன் இணைந்து செயற்பட முடியும்.

**விவசாயத்துக்கப்பால், உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு அல்லது பேரிடர்களுக்கான தீர்வுகள் போன்ற விடயங்களில் ட்ரோன்களின் பயன்பாடுகளை விரிவுபடுத்த கெனில்வொர்த் இன்டர்நெஷனல் ஏதேனும் திட்டமிட்டுள்ளதா?**

ஆம், நாங்கள் ஏற்கனவே பல வழிகளையும் ஆராய்ந்து வருகின்றோம். இதன் ஒரு முக்கிய பகுதி கடலோர கண்காணிப்பாக அமைகின்றது. நீண்ட தொலைதூரம் நோக்கி இயங்கும் ட்ரோன்களினூடாக சட்டவிரோத செயற்பாடுகளைக் கண்காணிக்கவும் தொலைதூர இடங்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கவும் இது உதவும்.

உட்கட்டமைப்பு பராமரிப்பையும் நாங்கள் பரிசீலித்து வருகின்றோம். குறிப்பாக, பல நாடுகள் ட்ரோன்களைப் பயன்படுத்தி அதி உயர் அழுத்த மின் இணைப்புகளைப் பராமரிக்கின்றன. அத்துடன், மற்றொரு பயன்பாடாக பாதுகாப்பும் கண்காணிப்பும் உள்ளன. இதனூடாக ட்ரோன்களின் கண்காணிப்புத் திறன்களை மேம்படுத்த முடியும். தவிர, தீயணைப்புச் செயற்பாடுகளுக்கென பொருத்தப்படுகின்ற ட்ரோன்கள் எதிர்பாரா அவசரநிலைச் செயற்பாடுகளுக்கு பெரும் உதவி புரிகின்றன.

**அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளில் இலங்கையின் விவசாயம் மற்றும் பிற துறைகளில் ட்ரோன் தொழில்நுட்பத்தின் அபிவிருத்தி குறித்து உங்கள் எதிர்பார்ப்பு எவ்வாறு அமைகின்றது? இலங்கை வங்கி போன்ற நிறுவனங்கள் இந்த வளர்ச்சிக்கு எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?**

துல்லியத்தன்மை மற்றும் தரவுகள் அடிப்படையிலான விளைச்சலை நோக்கி இலங்கையின் விவசாயத்துறை வேகமாக வளர்ந்து வருகின்றது. வள ஒதுக்கீட்டை மேம்படுத்த தரவைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் ட்ரோன்கள் இந்த மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக, உரத்தை ஒரே மாதிரியாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ட்ரோன்கள் மண்ணின் நிலைமைகளை மதிப்பிட்டு துல்லியமான தகவல்களை வழங்க முடியும். அத்துடன், ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான துல்லியமான அளவைத் தீர்மானிக்க முடியும். விரயங்களைக் குறைத்து செயற்றிறனை மேம்படுத்தவும் முடியும்.

நீர் பாதுகாப்பு மற்றொரு முக்கியமான விடயமாக உள்ளது. சில தோட்டங்களில் எங்கள் ட்ரோன்கள் தெளிப்பு அளவை ஒரு ஹெக்டேயருக்கு 400 லீற்றரிலிருந்து 100 லீற்றராகக் குறைப்பதனூடாக ஆண்டுதோறும் ஐந்து மில்லியன் லீற்றர் தண்ணீரைச் சேமிக்க உதவியுள்ளன. இந்த அளவிலான செயற்றிறன் நிலையான விவசாய செயற்பாட்டுக்குப் பேருதவி புரிகின்றது.

ட்ரோன்களுக்கு தொடர்ச்சியான மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை ஒன்றிணைக்கும் தேவைப்பாடு காணப்படுவதனால் இலங்கை வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கான மூலதனத்தை வழங்குவதன் மூலம் இந்த வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்க முடியும். வழக்கமான கடன் மாதிரிகளுக்கப்பால் சிந்திப்பதற்கான வங்கியின் விருப்பம் ஏற்கனவே ட்ரோன் தொழில்நுட்பத்தை இலங்கைக்கு கொண்டு வருவதில் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளது. மேலும் தொடர்ச்சியான ஆதரவு அதன் நீண்டகால வெற்றியை நிச்சயம் உறுதிசெய்யுமெனலாம்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 பெப்ரவரி, 20ஆம் திகதி, வியாழக்கிழமை

# காட்டுத் தர்பாரை அனுமதிக்கலாமா?

கொழும்பு - புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகக் கும்பல் தலைவர் கனேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்டுள்ளார். சட்டத்தரணி வேடமிட்ட துப்பாக்கிதாரி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் துணிவுடன் இந்தச் சம்பவத்தை நிகழ்த்தியிருக்கிறார். சந்தேகநபர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டாலும் கூட இந்தச் சம்பவமானது சமூகத்தில் பேசுபொருளாகியுள்ளது.

இத்தனைக்கும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டிருந்த ஓர் இடத்தில் எந்தச் சலனமுமின்றி மேற்படி துப்பாக்கிதாரி வந்துசெல்வது அங்குள்ள சி.சி.ரி.வி. கெமராக்களில் பதிவாகியுள்ளது.

நீதிமன்றம் என்பது நீதியைக் கோரி, பாதிக்கப்பட்டோர் வந்து செல்லும் இடம். அதேபோல, சாட்சிகளும் தைரியமாக வந்து சாட்சியத்தை வழங்கிவிட்டுச் செல்லும் இடம். இப்படியான சம்பவங்கள் சாட்சியாளர்கள் துணிவாக நீதிமன்றம் வருவதை கேள்விக்குள்ளாக்கலாம். அதுமட்டுமல்ல, இதனால் பல எதிர்விளைவுகள் கூட ஏற்படலாம்.

நீதிமன்றத்தில் சாட்சியளிக்க வந்தவர்கள் மீது படுகொலைத் தாக்குதலொன்று இந்த வருட ஆரம்பத்திலும் இடம்பெற்றது. மன்னார் நீதிமன்றத்துக்கு முன்னால் ஜனவரி 16ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றது. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு தப்பிச்சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தச் சம்பவம் தொடர்பாக எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

நாட்டில் அண்மைக்காலமாகத் துப்பாக்கிக் கலாசாரம் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. நேற்றுமுன்தினம் காலியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டனர். அரசியல் ரீதியாக கடந்த காலங்களில் சர்ச்சையாகச் செயற்பட்ட ஒருவரே தனது இரு பிள்ளைகள் சகிதம் கொல்லப்பட்டார். அதற்கு முதல்நாள் கொழும்பு கொச்சிக்கடையில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தாலும், இப்போது நடக்கும் சம்பவங்கள் சற்று வித்தியாசமானவையாக இருக்கின்றன. யார் எங்களைக் கேள்வி கேட்பது என்றவாறான கோதாவில் துணிச்சலாக இந்தச் சம்பவங்கள் அரங்கேறுவதைக் காண முடிகிறது. நேற்றைய துப்பாக்கிதாரி ஏற்கனவே கல்கிஸை, தெஹிவளை பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை நடத்தியவரென்று பொலிஸ் கூறுகிறது. அதேபோல், நேற்றைய துப்பாக்கிதாரியை அழைத்துவர உதவியதாகக் கூறப்படும் சட்டத்தரணி வேடமிட்ட பெண், நீர்கொழும்பில் போதைவஸ்து வர்த்தகத்தில் ஈடுபட்டவரென பொலிஸ் தெரிவிக்கிறது.

இந்தப் பின்னணியில் ஏற்கனவே துப்பாக்கிச் சூட்டை நடத்திய ஒருவரும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஒருவரும் கொழும்பின் பரபரப்பான பாதுகாப்பு இடமொன்றுக்குள் புகுந்து இப்படியான சம்பவத்தை அரங்கேற்றியிருப்பது இலேசான விடயமல்ல. பாதுகாப்புத்துறை இந்த விடயத்தை சீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதன் பின்னாலுள்ள சக்திகளை அடையாளம் காணவேண்டும்.

நேற்றைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், நீதிமன்ற விசாரணைக் கூண்டுக்கருகில் இடம்பெற்றுள்ளது. நீதிபதிகளையும் பிரபல வழக்குகளில் ஆஜராகும் சட்டத்தரணிகளையும் இப்படியாக துப்பாக்கிதாரிகள் இலக்குவைக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அதுமட்டுமல்ல, எளிமையை விரும்பும் நாட்டின் உயர்மட்ட அரசியல் பிரமுகர்களே பாதுகாப்பின்றி சில இடங்களுக்குச் செல்லும்போது அவர்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?

இப்போதுகூட நீதிமன்ற வளாகத்தில் இந்தச் சம்பவம் நடந்ததால் உடனடியாகப் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்படக்கூடும். இனி சோதனைகள் கடுமையாக நடக்கலாம். சோதனை நடவடிக்கையின் பின்னரே மக்கள் உள்ளே அனுமதிக்கப்படலாம். ஆனால், அவையெல்லாம் தற்காலிக ஏற்பாடுகளாகவே இருக்க முடியும். அவை நிரந்தரமான தீர்வுகள் அல்ல.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்த விடயத்தை அவசரமான விடயமாகக் கருதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து இந்தத் துப்பாக்கிக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். இந்த நிலைமை தொடர்ந்தால் இலங்கை மற்றுமொரு சிக்காகோவாக மாறிவிடலாம். சட்டவிரோதக் கும்பல்களும் ஆயுதக் குழுக்களும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இயங்கிவருவது இப்போது சாதாரணமாகக் காணக்கூடிய விடயமாகிவிட்டதால் அதில் கடும்போக்கு நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட்டு அவைகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும். பொது நிர்வாகத்தையும் பொலிஸ் துறையையும் கண்காணிக்க சுதந்திரமான ஆணையங்கள் நிறுவப்படவேண்டும். அரசு விரைந்து செயற்படவேண்டும். கைதான சந்தேகநபரிடம் விசாரணைகளை நடத்தி அவர் பின்னாலுள்ள சக்திகளையும் அடையாளம் காணவேண்டும்.



# தேவையான மாற்றம்!

சமீபத்தில் நண்பரிடம் அவரின் வீட்டுக்கு முன்பாகப் பேசிக் கொண்டிருந்தேன். கொரியர் பையன் வந்து நிற்கவும் வீட்டுக்குளிருந்து நண்பரின் மகன் வெளியே வரவும் சரியாக இருந்தது. ஏதோ பார்சல் வாங்கிய பின் அதற்கான தொகையை ஸ்கேன் செய்து கொடுத்துவிட்டு வீட்டுக்குள் செல்ல முற்பட்டான். கொரியர் பையன் சென்ற பின் நண்பரின் மகனிடம், ''என்ன பொருள் வாங்கியிருக்கிறாய்?'' - எனக் கேட்டேன். வீடு துடைக்கும் துடைப்பங்குச்சி என்று சொன்னான். நான் நண்பரைப் பார்த்தேன். நான் வீட்டு விஷயத்திலோ பையன் விஷயத்திலோ எதிலும் தலையிடுவதில்லை என்று சொன்னார். பையன் சென்று விட்டான்.

மீண்டும் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் நண்பருக்கு அழைப்பொன்று வந்தது. நண்பர் தனது முகவரியைச் சொல்லி வீட்டுக்கு வருவதற்கான வழியையும் சொன்னார். அரை மணி நேரத்தில் ஒரு கொரியர் பையன் கொண்டு வந்தது நண்பருக்கான பார்சல். பார்சல் வாங்கிய பின் பணம் வழங்கி விட்டு ஒரு தாளில் கையொப்பம் போட்டுவிட்டு என்னிடம் வந்தார்.

பேசிக்கொண்டிருந்த அரை மணி நேரத்தில் அந்தத் தெருவில் மூன்று வீடுகளுக்குப் பொருட்களை விநியோகம் செய்து கொண்டிருந்தான் அந்த இளைஞன். இதுபோன்று அந்த ஊரில் எத்தனை வீதிகளில் எத்தனை இளைஞர்கள் எத்தனை ஆயிரம் பொருட்களை விநியோகம் செய்துகொண்டிருப்பார்கள் என நினைத்துப் பார்த்தேன். ''ஒன்லைனில் நீ என்ன பொருள் வாங்கினாய்?'' - எனக் கேட்டேன். ''டேபிளில் செல்போன் வைப்பதற்கான ஸ்டாண்ட்'' - என்று சொன்னான் நண்பன். ''இப்படி எல்லாமே ஒன்லைனில் வாங்கிக் கொண்டிருந்தால் நம்மூர் கடைகளில் விற்பனை என்னாவது?''- எனக் கேட்டேன். அதற்கு நண்பன் சொன்ன பதில் தான் கவனிக்க வேண்டியது. ''இதே பொருள் நம்மூர் கடைகளில் 50 ரூபா அதிகமாக இருக்குமென்று சொன்னான். சில பொருட்கள் 500 ரூபா வித்தியாசம் கூட இருக்கும்'' - என்று சொன்னான்.

வெளிமாநில உரிமையாளர்கள் நடத்தும் சில பல்பொருள் விற்கும் அங்காடிகளில் மக்கள் குவிந்து வருவதும் நடந்துகொண்டிருக்கிறது. காரணம், நம்மூர் உள்ளூர்க் கடைகளை விட பத்து ரூபா ஒரு பொருளுக்கு விலை குறைவாக இருக்கிறதென்று சொல்கிறார்கள்.

இப்படியாக ஒன்லைனில் பொருட்களை வாங்குவதற்கும் பெரிய பெரிய ஷொப்பிங் மோல்களில் சென்று வாங்குவதற்கும் மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் காரணமாக, உள்ளூர்க் கடைகளில் விற்பனை குறைவதோடு சில கடைகள் இழுத்து மூடப்படுகின்றன. உள்ளூர்க் கடைகளில் 10 ஆண்டுகள் வியாபாரம் செய்து அதில் வரும் இலாபத்தை வைத்து ஒரு சிறிய இடத்தை வாங்குகிறார்கள். அங்கே ஐந்து வருடங்களில் ஒரு சிறிய கடையும் கடையை ஒட்டி தனது வீட்டையும் அமைத்து தனது வாழ்வைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் சில்லறை விற்பனையாளர்களுக்கு இதுபோன்ற ஒன்லைன் வியாபாரங்களும் பெரிய பெரிய ஷொப்பிங் மோல்களும் சவாலான விஷயங்களாகவே இருக்கின்றன.

உள்ளூர் பால் பண்ணையில் வீட்டிலிருந்து பாத்திரம் கொண்டு சென்று பால் வாங்குவதை மறந்து விட்டோம். பெரும்பாலும் பொதி செய்யப்பட்ட பைக்கற் பால்களைத்தான் வாங்குகிறோம். இதனால் கறவை மாடுகள் வைத்திருக்கும் பால் வியாபாரிகளின் பால் விற்பனை பாதிக்கப்படும் நிலை உருவாகிவிட்டது.

இன்னொருபுறம் உணவு மற்றும் பிற ஒன்லைன் பொருட்களை விநியோகம் செய்வதற்காக ஆயிரக்கணக்கான நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகி இருக்கிறது. ஆனால், உண்மையில் ஒன்லைனில் வாங்கப்படும் பொருட்கள் அனைத்தும் தரமாக இருக்கின்றனவா? பொருட்களில் ஏதும் குறைபாடிருந்தால் எளிதாக மாற்றிக் கொள்ள முடியுமா? பணம் திரும்பக் கிடைக்கிறதா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில் கிடைப்பதில்லை.

ஒன்லைனில் பொருட்களை வாங்கி ஏமாந்து போனவர்களும் உண்டு. ஆனால், அதை அவர்கள் வெளியில் சொல்வதில்லை. நன்றாக இல்லாத பொருட்களை ஒன்லைனில் வாங்கி மற்றவர்கள் முன் தான் ஏமாளி என்று கூறுவதை யார் தான் விரும்புவார்கள்?

கவர்ச்சிகரமான விளம்பரங்களின் மூலம் ஒன்லைன் விற்பனை அதிகரித்து வருகிறது. ஒன்லைனில் விற்கப்படும் பொருட்கள் அனைத்துமே தரமானவையென்று சொல்ல முடியாது. தரமில்லாத பொருட்களை வாங்கிய அனைவருமே பொருளை மாற்றிக் கொடுக்கச் சொல்லவோ, பணத்தைத் திருப்பி கேட்கவோ முன் வருவதில்லை. இது ஒன்லைன் வியாபாரத்துக்குச் சாதகமாக அமைகிறது.

ஒன்லைனில் வியாபாரம் செய்யும் நிறுவனங்கள், தங்களுடைய நிறுவன முகவரியை, தொடர்பு எண்களை பெரும்பாலும் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிப்பதில்லை. ஏதாவது ஒரு மின்னஞ்சல் அல்லது தொலைபேசி இலக்கம் என ஒன்றைக் கொடுத்து விடுவார்கள். அதில் எளிதில் தொடர்பு கொள்ள இயலாத நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

உள்ளூர்க் கடைகளில் நாம் பொருட்களை வாங்கும்போது நமக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. வாங்கிய பொருட்கள் பழுதடைந்தால், நேரிலேயே கேட்க முடியும்.

நமக்குத் தெரிந்த நண்பரோ உறவினரோ ஒரு பொருளை வாங்கி விட்டார் என்பதற்காக நாமும் ஒன்லைனில் வாங்க வேண்டுமென்கிற அவசியம் எதுவுமில்லை. அந்தப் பொருள் நமக்கு இப்போதைக்கு தேவையா இல்லையா என்று கூட முடிவு செய்யாமல் உடனடியாக ஒன்லைனில் வாங்கி விட முயல்கிறோம்.

எனவே, தவிர்க்க இயலாத சூழலில் அத்தியாவசியமான சில பொருட்களை - அருகில் கிடைக்காத பொருட்களை - வேறு வழியின்றி ஒன்லைனில் வாங்கலாம்.

ஒன்லைனில் உணவு வாங்குகிறோம்; உடைகள் வாங்குகிறோம்; அன்றாட வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குகிறோம். ஒன்லைனில் பார்த்துத்தான் இப்போது வீடும் வாங்குகிறோம். ஒன்லைன் மூலமாக கல்வியும் கற்கிறோம். இப்படி எல்லாமே ஒன்லைன் மயமான பிறகு பொருட்களை வாங்குவதை மட்டும் தவிர்க்க முடியுமா? என்ற கேள்வி எழலாம்.

நேரில் சென்று கடையில் பொருளை அதனுடைய வடிவம், செயல்திறன் போன்றவற்றை ஏஃ பரிசோதித்து வாங்க இயலும். இப்படி இல்லாமல் வெறும் விளம்பரங்களை நம்பி ஒன்லைனில் பொருட்களை வாங்குவது சரியாக இருக்குமா என்கிற கேள்வியும் எழுகிறது.

இன்னொருபுறத்தில் உள்ளூர்க் கடைகளை நடத்துபவர்கள் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதால் மக்கள் ஒன்லைனில் பொருட்களை வாங்குகிறார்கள்.

நகரங்களில் வாழ்க்கை இயந்திரமயமாகிவிட்டது. மக்கள் நேரம் கிடைக்காமல் துன்பப்படுகிறார்கள். பொருட்களை வாங்க கடைக்குச் செல்வதற்குக் கூட பலரால் நேரம் ஒதுக்க முடிவதில்லை. ஒன்லைனில் பொருட்களை வாங்குவதற்கு இதுவும் ஒரு காரணமாகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலைமைகளில் தரமான பொருட்களை முடிந்த அளவுக்கு குறைந்த விலையில் கடைக்காரர்கள் விற்பனை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. ஒன்லைன் வணிகத்தில் பொருட்கள் வீடு தேடி வருவதைப் போல, தேவையான பொருட்களை கைபேசியில் கூறிவிட்டால், கடைக்காரர்களே வாங்கிய பொருளை வீட்டுக்கு எடுத்து வந்து தந்துவிடுகிறார்கள். உள்ளூர் கடைகளில் ஒன்லைன் முறையில் பொருட்களை விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

**நன்றி - தினமணி**

## இன்றைய நாளில்..

- ★ 1627 – யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.
- ★ 1818 – இலங்கையின் கண்டிப் பிரதேசத்தில் இராணுவ சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
- ★ 1935 – அண்டார்ட்டிக்காவுக்குச் சென்ற முதல் பெண் என்ற சாதனையை டென்மார்க்கைச் சேர்ந்த கரோலைன் மிக்கெல்சன் ஏற்படுத்தினார்.
- ★ 1946 – இலங்கைக்கு முதன்முதலாக இரட்டைத்தட்டு பஸ் கொண்டுவரப்பட்டது.
- ★ 1965 – அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படமெடுத்த ரேஞ்சர்-8 விண்கலம், சந்திரனுடன் மோதியது.
- ★ 1986 – சோவியத் ஒன்றியம் மீர் விண்கலத்தை ஏவியது. 15 ஆண்டுகள் புவியின் சுற்றுவட்டத்தில் இவ்விண்கலம் நிலைகொண்டிருந்தது.
- ★ 1987 – இந்தியாவின் அருணாசலப் பிரதேசம், அசாம் மாநிலத்திலிருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.
- ★ 2009 – இலங்கையில் தேசிய வான்படைத் தலைமை அலுவலகத்தைத் தாக்கும் பொருட்டு புறப்பட்ட விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையின் இரண்டு வானூர்திகள் இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

## நக்கல் நமசிவாயம்

*தனக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டுமெண்டு அர்ச்சுனா எம்.பி. பார்லிமென்ட்டில கேட்டிருக்கிறார்... காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுறது என்கிறது இதைத்தான்...*



# உள்ளூராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் ஜூன் 02 இல் ஆரம்பம்

## வெளியானது அதிவிசேட வர்த்தமானி

ஒவ்வொரு மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 2025ஆம் ஆண்டு ஜூன் 02ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுமென அறிவித்து பொது நிர்வாக, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 10ஆவது உறுப்புரையில் (1) உப பிரிவின் (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பொது நிர்வாக, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபயரத்னவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, 27 மாநகர சபைகள், 36 நகரசபைகள் மற்றும் 274 பிரதேச சபைகளது உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் 02ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகுமென அந்த வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலை...

தேசிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

வரவு-செலவுத் திட்டம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு இடையூறாக இருக்காது என்றும் அந்தக் கட்சி உறுப்பினர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

இதேவேளை, மிக விரைவாக தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆணைக்குழுவும் இதன்போது ஒப்புக்கொண்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் கட்சித் தலைவர்கள் நேற்று (19) தேர்தல் ஆணைக்கழு உறுப்பினர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அதன்போதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்த சந்திப்பு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலானது அமைச்சரினால் ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்டது மாத்திரமல்லாமல் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாமல் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது வரையில் இரண்டரை வருடங்கள் தேர்தல் காலதாமதமாகியுள்ளது. அடிமட்டத்திலான மக்கள் பிரதிநிதிகள் இன்மையினால் மக்களும் பெரும் சிக்கலை சந்தித்துள்ளார்கள்.

பழைய வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக பழைய வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கான திருத்தச் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தேர்தலை நடத்துவதற்கான உரிமை தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது.

இந்நிலையில் ஒருசிலர் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கும் முயற்சித்து வருகிறார்கள். தேர்தலை நடத்துவதற்கு இருந்த சகல தடைகளையும் நிவர்த்தி செய்ததன் பின்னர் தேர்தலை ஒத்திவைக்க மீண்டும் முயற்சிக்கிறார்கள் என்றால் அது ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடாகும்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கும் அதிகாரத்துக்கமையவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமையவும் ஆணைக்குழுவால் முடிந்த தினத்தில் உள்ளூராட்சித் தேர்தலை மிக விரைவில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம். அதனை ஆணைக்குழுவும் ஏற்றுக்கொண்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழு இன்னும் திகதியை தீர்மானிக்கவில்லை. விரைவில் அதுதொடர்பில் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமென்று நம்புகிறோம்.

தோல்வியை கண்டு பயங்கொள்வதாலேயே பல்வேறு காரணங்களைக்காட்டி தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கிறார்கள். எது எவ்வாறாக இருந்தாலும் உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் மாதத்திலேயே இடம்பெறும். வரவு - செலவுத் திட்டம் தேர்தலுக்கு இடையூறாக அமையாது. அடுத்த மாதத்தில் வரவு - செலவுத் திட்டம் நிறைவடைந்துவிடும் என்று குறிப்பிட்டார்.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கான சுற்றுச்சூழலை ஆய்வுசெய்ய கள விஜயத்தை மேற்கொண்ட அதிகாரிகள் திருப்பி அனுப்பிவைப்பு





***(ஜோசப் நயன்)***

மன்னார் கொன்னையன் குடியிருப்பு பகுதியில் கடந்த இரண்டு தடவைகள் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பை தெரிவித்த நிலையில், நேற்று (19) மூன்றாவது தடவையாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் கள விஜயத்தை மேற்கொண்டு கனிய மணல் அகழ்வுக்கான சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்க கள விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருந்த போதும் இறுதியில் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்காத நிலையில் குறித்த குழுவினர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மன்னார் தீவு பகுதியில் கனிய மணல் அகழ்வு முன்னெடுப்பதற்கான ஆய்வு பணிகள் கடந்த இரு தடவைகள் முன்னெடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் வருகை தந்த குழுவினர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் இன்றைய தினம் புதன்கிழமை(19) காலை சுமார் 9.30 மணியளவில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு கட்டம் கட்டமாக வருகை தந்தனர்.

இதன்போது மாவட்டச் செயலகப் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்படலாம் என்ற நோக்கத்துடன் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் தோட்டவெளி கொன்னையன் குடியிருப்பு பகுதிக்குச் சென்றனர்.

இதன்போது அப்பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த பகுதிக்கு கள விஜயத்தை அதிகாரிகள் மேற்கொண்டபோது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டனர்.

இதன்போது மக்களின் காணிகளின் ஊடாக தனியார் காணியில் கனிய மணல் பரிசோதனைக்கான கள விஜயத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது மக்களும் தொடர்ந்தும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்த நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குறித்த கனிய மணல் பரிசோதனை மற்றும் அகழ்வு நடவடிக்கைக்கு எதிராக உரை நிகழ்த்திய நிலையில், குறித்த விடயம் தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுசென்ற நிலையில், உடனடியாக நேற்று(19) முன்னெடுக்கப்பட இருந்த கனிய மணல் அகழ்வுக்கான பரிசோதனை கள விஜயம் நிறுத்தப்பட்டு, வருகை தந்த அதிகாரிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதன்போது பொது அமைப்புகளின் தலைவர் வி.எஸ்.சிவகரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் உள்ளடங்களாக கிராம மக்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மீன்பிடி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



பேருவளை, சீனன்கோட்டையைச் சேர்ந்த இஸ்பஹான் ஸாபிர் அகில இலங்கைக்கான சமாதான நீதவானாக களுத்துறை மேலதிக மாவட்ட நீதிபதி சம்பத் கமகே முன்னிலையில் நேற்று (19) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறைக்கான டிப்ளோமா பட்டதாரியுமாவார்.

அரசாங்க தகவல் திணைக்கத்தில் ஊடக ஆய்வு அதிகாரியாக கடமையாற்றும் இவர் சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் நிர்வாகச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும் சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் அமைப்பின் முன்னாள் செயலாளராகவும் மற்றும் இதர சமூக சேவைப் பணிகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிடவுள்ள நீதவான்

***(பு.கஜிந்தன்)***

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் உள்ள மயானத்தில் கட்டடம் ஒன்று அமைப்பதற்காக கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெட்டப்பட்ட குழியில் இருந்து மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

இது குறித்து யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் குறித்த மயானத்தின் நிர்வாக உறுப்பினருமான கிருபாகரன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் குறித்த விடயத்தை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். அந்தவகையில் இன்று (20) பி.ப. 3.00 மணிக்கு குறித்த பகுதியை நீதவான் பார்வையிடவுள்ளார்.

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி

***(யடவத்த செய்தியாளர்)***

கலேவேல தேவாஹுவ பகுதியில் மின்சாரம் தாக்கி உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் (18) உயிரிழந்துள்ளார்.

தேவாஹுவ கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்ட ரிஷாட் முஃப்ரி என்ற 19 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மாவத்துகம தல்கஸ்பிடிய அல்-அஷ்ரக் மகா வித்தியாலயத்தில் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்றுவந்த குறித்த மாணவன் அண்மையில் நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்த நிலையில் இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ள மின்கம்பி ஒன்றை சீர்செய்ய முற்பட்ட வேளையில் நேற்று முன்தினம் காலை 09 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மகுள்கஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

**Tel No: - 0112 127 209**





# றொட்டவெவ கிராம மக்களின் விவசாய காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கை

## அரச காணிக்குள் சென்றால் வழக்குத்தாக்கல் செய்வோமென வனப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் அச்சுறுத்தல் விடுப்பதாகவும் விசனம்

*(பதுர்தீன் சியானா)*

திருகோணமலை - றொட்டவெவ கிராம மக்களின் சின்னப்புளியங்குளம் மற்றும் பெரிய புளியங்குளம் பகுதிகளிலுள்ள விவசாயக் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

30 வருடங்களாக யுத்தம் இடம்பெற்றிருந்த நிலையில், குறித்த விவசாய நிலங்களுக்குச் செல்ல வேண்டாமெனவும் பாதுகாப்புப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேநேரம், தற்போது



குறித்த விவசாய நிலங்களுக்குள் சென்று விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோது

வனப்பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் விவசாயிகளை அரச காணிக்குள் சென்றால் வழக்கு தாக்கல் செய்வோம் எனப் பயமுறுத்தி அவர்களைச் செல்லவிடாது தடுத்து வருகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் போது கமநெகும - மகநெகும திட்டத்தினூடாக குறித்த இரண்டு குளங்களும் புனரமைக்கப்பட்டு வீதிகளும் விவசாயிகளின் நலன் கருதி புனரமைக்கப்பட்டதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஆனாலும், றொட்டவெவ - மிரிஸ்வெவ கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்களின் மூதாதையர்கள் குறித்த வயல் பகுதிக்குள் விவசாயம் செய்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இருந்தபோதிலும், தற்போதைய அரசாங்கம் மக்களின் நலன் கருதி சின்னப்புளியங்குளம், பெரியபுளியங்குளம் போன்ற குளங்களுக்கு கீழேயுள்ள வயல் நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கவேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட விவசாய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காரைதீவு, நிந்தவூர், ஒலுவில் பிரதேச உணவகங்களில் திடீர் பரிசோதனை

## நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு





*(ஒலுவில் செய்தியாளர்)*


பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புமிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்திலுள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்களை சோதனைக்குட்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் செவ்வாய்க்கிழமை (18) காரைதீவு, நிந்தவூர் மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் தலைமையிலான, அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.முனவ்வர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.இஸ்ஸடீன், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தாயாரிக்கும் பாத்திரங்களும் கைப்பற்றப்பட்டன. பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தும் வேலைத்திட்டம் பிராந்திய பணிப்பாளரின் உத்தரவுக்கமைவாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகரின் தாயார் காலமானார்



பி.பி.சி.தமிழோசை ஊடகவியலாளர் இரா.உதயகுமாரின் தாயார் மகேஸ்வரி இராசநாயகம் கடந்த செவ்வாய்க்கிழமை (18) காலமானார்

மட்டக்களப்பு சிங்களவாடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற நீர்ப்பாசன கள மேற்பார்வையாளரான இவர் முன்னாள் அமைச்சரவை அமைச்சர் இராஜதுரையின் மனைவியாவார். ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்களான சுதேசன், உதயச்சந்திரன் மற்றும் கோமதி, ஜெகதிலபரம் ஆகியோரின் தாயாராவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை(20) மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கல்வியங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை முந்தி சென்றதாகக் கூறி வர்த்தகர் மீது தாக்குதல்

*(கனகராசா சரவணன்)*

ஏறாவூர் மைலம்பாவெளி பகுதி பிரதான வீதியில் மதுபோதையில் சிவில் உடையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை முந்திச் சென்ற வர்த்தகரொருவரை நிறுத்தி அவர் மீது தலைக்கவசத்தால் தாக்கியதால் அவர் படுகாயமடைந்த நிலையில், தாக்குதலை மேற்கொண்ட இரு பொலிஸாரும் அங்கிருந்து தப்பியோடிய சம்பவம் செவ்வாய்க்கிழமை(18) இரவு இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

வந்தாறுமூலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த வர்த்தகர் குணரட்னம் மதிகுமார் ஏறாவூர் மைலம்பாவெளி பகுதியிலுள்ள கிராம சேவகர் காரியாலயத்துக்கு முன்னால் மோட்டார் சைக்கிளொன்றை முந்திச் சென்றதையடுத்து அவரை முந்திச் சென்று, அவரது மோட்டார் சைக்கிளை நிறுத்தி ''நாம் பொலிஸார், நீ பிழையாக மோட்டார் சைக்கிளைச் செலுத்துகிறாய்'' - என்று தெரிவித்து வர்த்தகர் மீது தமது தலைக்கவசத்தால் தலையில் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து அவர் படுகாயமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து அங்கு பொதுமக்கள் கூடி குறித்த பொலிஸார் இருவரையும் அங்கிருந்து செல்லவிடாது தடுத்து நிறுத்தி பொலிஸ் அவசர இலக்கமான 119 தொலைபேசி இலக்கத்துக்கு அறிவித்ததையடுத்து அங்கு ஏறாவூர் பொலிஸார் முச்சக்கரவண்டியில் வந்து விசாரணையை மேற்கொண்டபோது தாக்குதலை நடத்திய பொலிஸார் இருவரும் மதுபோதையில் இருப்பதைக் கண்டறிந்த பொலிஸார் அவர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தை அண்மித்ததும் குறித்த பொலிஸார் இருவரும் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லாமல் அங்கு அருகிலுள்ள வீதியால் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். குறித்த இரு பொலிஸாரும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் நீதிமன்றப் பிரிவில் கடமையாற்றி வருபவர்களாவர்.

சம்பவதினம் காலை 11மணிக்கு நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகிய இருவரைக் கைதுசெய்வதற்காக கடமை கையேட்டில் கையொப்பமிட்டுவிட்டு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மது போதையில் தாக்குதலை மேற்கொண்ட இரு பொலிஸாருக்கும் எதிராக பாதிக்கப்பட்ட வர்த்தகர் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வும் கண்காட்சியும்





*(வீரமுனை செய்தியாளர்)*

கிழக்கு மாகாணத்துக்கான தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியானது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை(18) மட்டக்களப்பில் இடம்பெற்றன.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜயசிங்க தலைமையில் கிழக்கு பல்கலைக்கழக Techno park நிலையத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக துறைப் பீடாதிபதி பேராசிரியர் என்.இராஜேஸ்வரன் உள்ளிட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீடுகளுக்கு ஆதரவு வழங்குவோரின் கண்காட்சிக்கூடங்களை அதிதிகள் பார்வையிட்டனர். தொழில் முயற்சியாளர்களை ஏற்றுமதிச் சந்தையினுள் இணைத்து அவர்களை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சர்வதேச தரத்தில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வுகள் இதன் போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த வருடம் இலங்கையிலிருந்து 12 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டபோதிலும், 19 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்நிலையை மாற்றுவதற்கான செயற்றிட்டங்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கான வங்கிக் கடன்கள் வழங்குதல், குத்தகைக்கு காணி வழங்குதல் போன்ற மேலும் பல விடயங்கள் குறித்து இதன்போது உயரதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டன.

# மாமனாரை பொல்லால் தாக்கிய மருமகன் கைது

*(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)*

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் சின்னவெம்பு கிரானில் மருமகன் பொல்லால் தாக்கிய நிலையில் மாமனார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

இதன்போது பொடி எட்வேட் போஸ் என்ற 66 வயது முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் இடம்பெற்ற தினம் பகல் வேளை வீட்டுக்கு வந்த மருமகன் தனது மகளுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவரை தாறுமாறாகத் தாக்கியபோது அதனைத் தடுக்கும் முயற்சியில், ஏன் அவளை அடிக்கிறீர்கள் என தட்டிக்கேட்ட போது திடீரென அவரின் தலை மீது பொல்லால் தாக்கியதில் அவர் காயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

தாக்குதல் மேற்கொண்டவரை வாழைச்சேனை பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உடற் கூற்றாய்வின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# வேண்டுவோருக்கு அருள்பாலிக்கும் 85வருட பழைமை வாய்ந்த செட்டிபாளையம் சிவன் ஆலயம்

**இன்று சங்காபிஷேக நிகழ்வு**

*(கதிரேசபிள்ளை கிருபாகரன்)*

மட்டக்களப்பு செட்டிபாளையம் புண்ணியபதியில் சிவன் ஆலயம் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தில் தென்திசை நோக்கிய கருவறையில் தட்சணாமூர்த்தியாக சிவலிங்க வடிவில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். வேண்டுவோர் வேண்டியபடி அருள்பாலிக்கும் அருளாட்சி நிறைந்த ஆலயமாக செட்டிபாளையம் சிவன் ஆலயம் பிரசித்திபெறுகிறது. இது 85வருட பழைமை வாய்ந்த ஆலயமாகும்.

இவ்வாலய கருவறையில் அமைந்துள்ள மூலமூர்த்தி சோமகலா நாயகி சமேத சோமநாதலிங்கேஸ்வர் என அழைக்கப்படுகின்றார். ஆன்மீகத்துறவி ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்த கிரி சுவாமி இந்திய காஷ்மீரிலிருந்து 1939 களில் இலங்கைக்கு வந்து செட்டிபாளையம் கிராமத்தில் சிவன் ஆலயத்தை நிறுவி மக்களை ஆன்மீக வழியில் செப்பனிட்டு சமூகத்தை நேசிக்கும் நல்லதொரு பரம்பரையினரை உருவாக்கினார்.

செட்டிபாளையத்தில் 1940ஆம் ஆண்டு சுவாமியின் அருளாசியினாலும் மக்களின் அயராத பங்களிப்பாலும் சிவன் ஆலயத்தை நிறுவினார். மக்கள் சிவனை குடிசையில் வைத்து வழிபட்டு வந்தனர். இதன் பிற்பட்ட காலங்களில் குறிப்பாக, 1952 களில் ஆலயத்தை கல்லினால் அமைக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு திருவருள் பெண்கள் சங்கத்தின் பிடியரிசி சேகரிப்பும் திருவருள் ஆண்கள் சங்கத்தின் சந்தாப்பண அறவீடு மற்றும் கிராம மக்களின் நிதிப் பங்களிப்பும் ஆலய கட்டுமானத்துக்கு கைகொடுத்தன.

எனினும், 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியால் ஆலய கட்டுமானம் பாதிக்கப்பட்டது. இருந்தபோதிலும், ஆலய நிர்வாகத்தினரின் அயராத முயற்சியின் காரணமாக சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஆலயத்தை அதே இடத்தில் 1981ஆம் ஆண்டு தென்திசை நோக்கி அமர்ந்த மூலவரை பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகத்தை மக்கள் நிறைவுசெய்திருந்தனர்.

### மூலமூர்த்தி கிடைத்த வரலாறு

ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள் மக்களிடம், தாங்கள் வழிபடுவதற்கு ஒரு மூலமூர்த்தி உங்கள் விரைவில் ஆலயம் நோக்கி வந்துசேரும் என்று குறிப்பிட்ட போதிலும், யாரும் எதிர்பாராதவேளை ஒருநாள் வம்மிமர நிழலில் சிவலிங்கம் இருப்பதைக் கண்ணுற்ற மக்கள் ஆச்சரியமடைந்தனர். இறைவனின் திருவிளையாடல் என நினைந்து அச்சிவலிங்கத்தையே மூல மூர்த்தியாக பிரதிஷ்டை செய்து வணங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இவ்வாலய கட்டுமானத்துக்காக வங்கக் கடலோரம் ஆலயத்துக்கு சரிநேராகக் கரையொதுங்கிய பெரியதொரு மரத்தை மக்கள் கண்டெடுத்து இதையொரு இறையருளாக நினைந்து ஆலயத்துக்கு வழங்கியதாகவும் அந்த மரத்தின் மூலமே ஆலயம் முழுவதற்குமான கூரை அமைக்கப்பட்டதாகவும் பண்டிதர் வீ. சி. கந்தையா தனது 'ஈழத்து ஆலயங்கள்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவை இரண்டும் பேரதிசயமாக இன்று வரை மக்களால் பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வளர்ச்சி மிக்க பின்புல சூழலில் 1990ஆம் ஆண்டுகளில் செட்டிபாளையத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. இவ் இராணுவ முகாம் எல்லைக்குள் இவ்வாலயமும் உள்வாங்கப்பட்டது. இதன் காரணமாக ஆலயம் பல்வேறு விதமான பாதிப்புகளை எதிர்கொண்டது. அக்காலத்தில் மக்கள் வழிபட முடியாத சூழ்நிலை காணப்பட்டது. எம்பெருமானின் பூஜை வழிபாடுகளுக்கு கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆலய கட்டுமானம் பாதிப்புகளை எதிர்கொண்டது. 2011ஆம் ஆண்டு இராணுவ முகாம் அகற்றப்படும் வரை இவ்வாலயத்தின் பகுதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சேதமாக்கப்பட்டன.

இவ்வேளை 2013 இல் புதிய நிர்வாக சபை பொறுப்பெடுத்தது. இதுவரை காலமும் யுத்த வடுக்களைச் சுமந்திருந்த கிராம மக்களுக்கு சுவாமிஜியின் போதனைகளுக்கிணங்க பொறுப்பெடுத்த நிர்வாகம் சமூக மற்றும் கல்விப் பணிகளை உத்வேகத்துடன் முன்னெடுத்தது. இருந்தபோதிலும், பாதிக்கப்பட்ட ஆலயத்தை தொடர்ந்து வழிபட முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டது. இந்நிலையில், 2016 ஆம் ஆண்டு புதிய நிர்வாக சபை தோற்றுவிக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் திருவருள் சங்கத்தின் நிர்வாகமும் கிராம மக்களும் புதிய ஆலயமொன்றை கவின் கலைநுட்பத்துடன் அமைப்பதற்குத் தீர்மானித்தனர்.

இந்நிலையில், 2016.11.05ஆம் திகதி புதிய ஆலயத்துக்கான அடிக்கல் ஆலயத் தலைவர் மூ.பாலகிருஷ்ணன் தலைமையில் சிவஸ்ரீ சச்சிதானந்தமூர்த்தி குருக்களினால் நாட்டி வைக்கப்பட்டது. கிராம மக்களினதும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சிவபக்தர்களினதும் இலங்கை தேசம் மற்றும் புலம்பெயர் தேசத்தில் வாழும் மக்களதும் நிதிப் பங்களிப்போடு புதிய ஆலயம் அமைக்கப்பட்டு, 2025 பெப்ரவரி 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று, இன்று வியாழக்கிழமை(20) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் மற்றும் தாந்தாமலை முருகன் ஆலயங்களின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக் குருக்கள் தலைமையிலான குருமார்களால் சங்காபிஷேகம் நிகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய புல்லினங்களை உண்பதற்காக வயல் பிரதேசத்தைத் தேடிவரும் யானைக்கூட்டம்



*(பாறுக் ஷிஹான்)*

வேளாண்மை அறுவடையின் பின்னர் யானைக் கூட்டம் புதிதாக முளைக்கின்ற புல்லினங்களை உண்பதற்காக நாடி வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டி வில்லுக்குளப் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு திடீரென வருகை தந்துள்ளன.

இதன்போது குறித்த யானைகள் அங்குள்ள புதிய புல்லினங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானைக் குட்டிகளுடன் விளையாடுவதையும் காண முடிந்தது. நேற்று பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என சுமார் 100க்கும் அதிகமான யானைகள் அப்பகுதியிலுள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன. தினமும் அப்பகுதிக்கு வரும் யானைக் கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றதுடன் இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள், சத்தங்களை எழுப்பிய வண்ணமுள்ளனர்.

மேலும் இப்பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுகின்றன. அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 130 க்கும் மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகை தருவதுடன் அருகிலுள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Institute of Architects


# ARCHITECT 2025

POLYMATHIC EXCELLENCE

CRAFTING NARRATIVES, DESIGNING TOMORROWS

# இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவக கூட்டத்தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வு - 2025

## முதன்மை விருந்தினரின் செய்தி



இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் (SLIA) 43ஆவது ஆண்டுக் கூட்டத்தொடரானது, இந் நிறுவகத்தின் அர்ப்பணிப்பையும் தொலைநோக்கையும் பிரதிபலிப்பதுடன், உள்ளூரில் மற்றும் உலகளாவிய சமூகங்களை வடிவமைப்பதில் எடுக்கப்படும் முக்கியமான முன்னேற்றங்களையும் வெளிப்படுத்துகின்றது.

எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நிகழ்வுகள், ஒன்றிணைந்த முயற்சியின் சக்திவாய்ந்த தாக்கத்தை உள்ளூர் வணிக வளர்ச்சி வழியாகவும் அரசியல் சேவைகளின் அர்ப்பணிப்பு வழியாகவும் மற்றும் முன்னேற்றத்துக்காக எடுக்கப்படும் உலகளாவிய கூட்டாண்மைகள் வழியாகவும் உணர்த்துகின்றன. மேலும் உள்ளூர்ச் சாதனைகள் உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றிருப்பதைக் காண்பதில் பெருமையளிக்கின்றது. மேலும் இது பரஸ்பர வளர்ச்சிக்கும் புரிதலுக்கும் உறுதியான பாலமாகவும் செயற்படுகிறது.

இந்த 43ஆவது ஆண்டு கூட்டத்தொடர், உள்ளூர் திறமைகளை பாராட்டுவதற்கும் உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்திய சாதனைகளை முன்வைப்பதற்குமான ஓர் சக்திவாய்ந்த மேடையாக விளங்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றேன். எங்களின், இந்த ஒன்றிணைந்த முயற்சி, புதுமை, கலாசாரம் மற்றும் பகிர்ந்த அறிவு வெற்றிகரமான ஓர் எதிர்காலத்தை வடிவமைக்க உதவும்.

இந்த ஆண்டுக் கூட்டத்தொடரை தொடர்ந்து 43ஆவது முறையாகச் சிறப்பாக நடத்திவரும் இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் (SLIA) தலைவருக்கும் குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டும் ஒரு முறை வாழ்த்தி, வருங்கால ஆண்டுகளிலும் இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகம் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்றிட வேண்டும் என்று மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**Prof. Udeni Nawagamuwa, BSc Eng (Hons), MEng. Dr Eng. CEng**
**President, Sri Lanka Association for the Advancement of Science**

## தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதத்தில், இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகம் தனது ஆண்டு அமர்வுகளை பெருமையுடன் நடத்துகிறது. கட்டடக் கலையின் உயர்ந்த தரத்தை மேம்படுத்தும் எங்கள் முயற்சியின் முக்கியமான மைல்கல்லாகவும் இந் நிகழ்வு அமைந்துள்ளது.

SLIA இன் 43ஆவது ஆண்டு அமர்வின் அங்குரார்ப்பண விழாவினை முன்னிட்டு, மிகுந்த பெருமிதத்துடனும் மற்றும் மகிழ்ச்சியுடனும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதுமை, வளர்ச்சி மற்றும் சிறப்புமிக்க கட்டடக் கலையை ஊக்குவிக்க அர்ப்பணிப்பு மிகுந்த எங்கள் முயற்சிக்கான ஒரு சான்றாக இந்நிகழ்வு திகழ்கிறது.

இவ்வாண்டு மாநாட்டின் தாக்கம் குறித்து சிந்திக்கும்போது, இது எங்கள் சாதனைகளை மட்டுமல்லாது, இந்நிகழ்வு புதிய இலக்குகளையும் கட்டடக் கலைத் துறையின் வளர்ச்சியையும் எதிர்நோக்கிப் பார்ப்பதற்கான ஒரு மேடையாகவும் செயற்படுகின்றது.

இந்த ஆண்டும், எங்கள் சமூகத்தின் முக்கியத்துவமான பங்களிப்புகளைப் பாராட்ட, தங்கப் பதக்கம், வாழ்நாள் சாதனை விருதுகள் மற்றும் SLIA ஆண்டு விருதுகள் வழங்கப்படவுள்ளன. இவ் விருதுகள், தனிநபர் சாதனைகளை அங்கீகரிப்பதோடு, ஒன்றிணைந்த முயற்சியின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றன.

மேலும், SLIA கடந்த ஆண்டு பல முக்கிய சர்வதேச நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்தியுள்ளது.

குறிப்பாக, ARCASIA Forum 22 மற்றும் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச மாநாடு, 22 ஆசிய நாடுகளைச் சேர்ந்த கட்டடக்கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் நகர திட்டமிடுநர்களை ஒருங்கே கொண்டு வந்தது. இந்நிகழ்வுகள் இலங்கை சுற்றுலாவை ஊக்குவிப்பதுடன், உலகளாவிய கட்டடக் கலைச் சமூகத்துடனான எமது தொடர்பையும் வலுப்படுத்தியது. மேலும், உலக கட்டிடக்கலைக் கழகம் (UIA) பிராந்திய IV தலைவர்களின் சந்திப்பு மற்றும் SAARCH தலைவர்களின் மாநாட்டை நடத்தும் பெருமையும் இவ்வாண்டு இலங்கைக்குக் கிடைத்தது.

இந்த ஆண்டுக் கூட்டத்தொடர் மற்றும் ஆண்டு பொதுக் கூட்டம் போன்ற நிகழ்வுகள், கடந்த ஆண்டின் சாதனைகளை நினைவுகூரவும் எதிர்காலத்துக்கான வழிகளை அமைக்கவும் மற்றும் கட்டடக் கலைத்துறையின் வளர்ச்சிக்காக ஒத்துழைத்து செயற்படுவதற்கான அரிய வாய்ப்பை வழங்குகிறது. மேலும் நம் சமூகத்தின் வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் புதுமையை முன்னெடுக்க நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

எல்லோரையும் SLIAவின் கொடியின் கீழ் ஒன்றிணைந்து, படைப்பாற்றல், நிலைத்தன்மை மற்றும் தொழில்துறை முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்க, நாங்கள் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த 43ஆவது ஆண்டு அமர்வு, எங்கள் கடந்த கால சாதனைகளை கொண்டாடும் நிகழ்வாக மட்டுமல்லாது, எதிர்கால கட்டடக் கலையின் மேம்பாட்டுக்கான ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகவும் அமையும் என நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த முயற்சிகள் மற்றும் சாதனைகளை எதிர்நோக்கி எதிர்பார்த்து எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கட்டடக் கலைஞர் ரோஹண பண்டார ஹேரத்** FIA (SL)
FIIM (HK), FCPM, AP (GBCSL), Int.Asso. AIA (USA), SLAPM, ICOMOS, MSc (ARCH), BSc (BE)
President - Sri Lanka Institute of Architects
Chairman, City School of Architecture
Chairman Exhibition Committee - ARCHITECT – 2025
Convener – ARCASIA Forum 22 Forum, 2025

## மூத்த துணைத் தலைவரின் செய்தி



இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் (SLIA) மூத்த துணைத் தலைவராக, SLIA-வின் 43ஆவது ஆண்டு அமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வு , SLIA-வின் ஆண்டு அமர்வின் தொடக்கத்தைக் குறிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். இதில் முக்கிய விருதுகளை வழங்கும் விழாவும் இடம்பெறுகிறது. இந்த நிகழ்வின் மூலம், இலங்கை கட்டடக் கலையின் எதிர்காலத்தை வடிவமைக்கவுள்ள கட்டடக் கலைஞர்களின் முக்கிய பங்கையும் சிறப்பாக அங்கீகரிக்கின்றோம். நிலைத்தன்மை, புதுமை மற்றும் சமூகதொடர்பு (outreach programs) ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி, SLIAகல்வி மற்றும் தொழில்முறை தரங்களை மேம்படுத்தும் முயற்சியில் தொடர்ந்தும் உறுதியாக செயற்படுகிறது.

இந்த ஆண்டு அமர்வின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று – கட்டடக் கலைஞர்களின் வேலை மற்றும் வர்த்தகக் கண்காட்சி ஆகும். மூன்று நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சி, கட்டடத் தொழில் நிபுணர்கள், கட்டடக் கலைஞர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை ஒன்றுகூடச் செய்கிறது. சமூகத்துக்கு பயனளிக்கும் இந்த நிகழ்வு, நிபுணர்களுக்கும் வர்த்தக ஒத்துழைப்பாளர்களுக்கும் ஒரு முக்கிய சந்திப்பாக அமைகிறது. நான்கு முன்னணி கட்டக்கலைப் பள்ளிகளில் இருந்து மாணவர்களும் இதில் கலந்து கொண்டு அனுபவம் பெறுகின்றனர். இந்த நிகழ்வு உற்சாகமான சூழலை உருவாக்குவதுடன், பொழுதுபோக்கு நிகழ்வுகளையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும், ஆண்டு பொதுக் கூட்டம் SLIA உறுப்பினர்களுக்கு கடந்த ஆண்டின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து, எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்கவும் ஒரு அற்புதமான வாய்ப்பாக அமைகிறது.

எனவே, இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் 43ஆவது ஆண்டு அமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு சிறப்பிதழுக்கு இந்தச் செய்தியை வழங்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது எனப்பெருமைக்குரிய தருணமாகும்.

**கட்டடக் கலைஞர் திலும்மிணி டீ மெல்**,FIA (SL)
M.Sc. (Arch.), B.Sc. (BE) Hons, AP (GBCSL), Intl. Assoc. AIA.

## ஒருங்கிணைப்பாளரின் செய்தி



இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகம் (SLIA) 2025 ஜனவரி 14 முதல் 18 வரை கொழும்பில் ARCASIA Forum - 22 என்ற ஆசியாவின் முன்னணி கட்டடக் கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் தொலைநோக்கு சிந்தனையாளர்களை ஒன்றிணைத்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி மகிழ்ச்சியடைகின்றது. இப் பிரமாண்ட நிகழ்வின் ஒரு பகுதியாக, ஜனவரி 17 மற்றும் 18ஆம் திகதிகளில் BMICH மையத்தில் இருநாள் சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. மேலும் SLIA, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தன்னுடைய வருடாந்த மாநாட்டை, ARCASIA Forum 22 உடன் ஒருங்கிணைத்து, உறுப்பினர்களுக்கு ஒரு சர்வதேச கருத்தரங்கில் பங்கேற்கும் அரிய வாய்ப்பை வழங்கியது. இது அறிவு பரிமாற்றம், ஒத்துழைப்பு மற்றும் ஆசியக் கட்டடக் கலையின் சிறப்பை கொண்டாடும் வலுவான மேடையாக அமைந்தது.

Polymathic Excellence: Crafting Narratives, Designing Tomorrows என்ற தலைப்பின் கீழ், இந்த மாநாடு கட்டடக் கலையின் பல்துறைக் கோணத்தை முன்வைத்து, கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொலைநோக்குச்சிந்தனை, கட்டட வடிவமைப்பில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை ஆய்வு செய்தது. 'விஸ்வகர்மா' என்ற தொன்மையான கருத்து மற்றும் மாஸ்டர்-பில்டர் (முதன்மை கட்டடக் கலைஞர்) என்ற சொற்பதத்தினால் ஈர்க்கப்பட்ட இந்தப் பெயர், நவீன கால கட்டடக் கலைஞர்களின் ஒட்டுமொத்த பங்களிப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்டது. இந்த மாநாடு கட்டடக் கலையின் எல்லைகளை தாண்டி, பண்பாடுகளைக் கட்டியெழுப்பி, சமூக மாற்றங்களை ஈர்க்கும் ஆற்றலை மீண்டும் உறுதிப்படுத்தியது.

ARCASIA Forum 22 மாநாட்டில் உலகப் புகழ்பெற்ற கட்டடக் கலைஞர்களான Ar. Caroline Bos (UNStudio), Ar. Eran Chen (ODA), Ar. David Saladik (MASS Design Group), Ar. Thomas Spiegelhalter (Studio Thomas Spiegelhalter + Associates), Ar. Onur Teke (TEKE Architects Office) , Ar. Ishtiaque Zahir (VITTI), Ar. Gurjit Singh Matharoo (Matharoo Associates) மற்றும் Prof. Ar. Jaimini Mehta (Studio Jaimini Mehta) பங்கேற்றனர். இக்கட்டடக் கலைஞர்கள், பாரம்பரியச் சிந்தனைகளை சவால் விடுத்து மாற்றம் தரும் வடிவமைப்பு தத்துவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இலங்கைப் பிரதிநிதிகளாக Ar. Palinda Kannangara, Ar. Hirante Welandawe, Prof. Ar. Narein Perera ஆகியோருடன், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி ஆணையத்தின் (SLTDA) தலைவர் Mr. Buddhika Hewawasam மற்றும் களணிப் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் தொல்பொருளியல் வல்லுநர் (environmental archaeologist) Dr. T. R. Premathilake ஆகியோரும் உரையாற்றினர்.

இரண்டாம் நாள் மாநாடு ஒன்பது ஒன்றிணைந்த அமர்வுகளாக விரிவடைந்தது. இதில், 10 பேர் ARCASIA பிராந்தியத்திலிருந்து சிறந்த கட்டடக் கலைஞர்கள், 09 பேர் கொண்ட இலங்கையின் வளர்ந்து வரும் கட்டடக் கலைஞர்கள் மற்றும் 08 பேர் கொண்ட இலங்கையின் திறமையான கட்டடக்கலை மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். மேலும் குறிப்பிடத்தக்க இலங்கைப் பேச்சாளர்களான Archt. Nandike Samaranayake, Archt. Pradeep Kodikara & Archt. Jineshi Samaraweera, Archt. Danya Udukumbure, Archt. Sumudu Athukorale, Archt. Pinnya Samaratunga Archt. Chamika De Alwis, Archt. Chamikara Mose, Archt. Pasindu Kithmina மற்றும் Archt. Sandeepa Vithanage ஆகியோர் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் இளம் கட்டடக் கலைஞர்களுக்கு அமர்வுகளை ஒழுங்குபடுத்தும் மற்றும் ஒருங்கிணைக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்களும் முக்கிய அனுபவங்களைப் பெற்றனர்.

ARCASIA Forum 22 மாநாட்டின் நிறைவு, கட்டடக்கலைச் சமூகத்தின் மேன்மையை உறுதி செய்தது. சமூகங்களை உருவாக்கும், புதுமைகளை ஊக்குவிக்கும், பண்பாட்டு இணைப்புகளை ஏற்படுத்தும் கட்டடக்கலையின் சக்தியை மீண்டும் வலியுறுத்தியது. பிராந்தியத்திலுள்ள கட்டடக்கலை நிபுணர்களுக்கிடையே தொடர்ந்து உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான வித்தாகவும் அமைந்தது

இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகம் (SLIA) சார்பாக, ARCASIA Forum 22 மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக நான், நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் பேச்சாளர்களுக்கும் ஆதரவளித்த நிறுவனங்களுக்கும் தொண்டூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டை வெற்றிகரமாக உருவாக்கிய உங்கள் அர்ப்பணிப்பும் ஆதரவும் பாராட்டத்தக்கது.

**Archt. தமித் பிரேமதிலக்க FIA(SL)**
**B.Sc. (B.E.) M.Sc.(Arch) M.Sc.(Lands) AIA (USA) RIBA (UK)**
**Convener, ARCASIA Forum 22 Conference, 2025**

## செயலரின் வாழ்த்துச் செய்தி



இன்று, இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் (SLIA) 43ஆவது வருடாந்த மாநாட்டை பெருமிதத்துடன், எதிர்பார்ப்புடன், மற்றும் மிகுந்த உற்சாகத்துடன் தொடங்குகிறோம். இலங்கையின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக விளங்கும் "Architect 43" நிகழ்வு, வரலாற்று சிறப்புமிக்க ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குவதுடன், வரவிருக்கும் மூன்று நாட்களில் கட்டடக் கலைத்துறையின் தலைசிறந்த தொழில்முறை நிபுணர்கள், சிந்தனை வழிகாட்டிகள் மற்றும் புதுமை முன்னோடிகளை ஒன்றிணைக்கும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமையும். இந்த 43ஆவது வருடாந்த மாநாடுகள், எங்கள் நிறுவகத்தின் சிறப்புமிக்க பாரம்பரியத்தைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், புதுமை, முன்னேற்றம், மற்றும் ஒத்துழைப்பின் ஆற்றலால் ஊக்கமளிக்கின்ற ஒரு தொன்மையான கண்ணோட்டத்துக்காக உறுதியளிக்கிறது.

இந்த ஆண்டில் மாநாடுகள், தகவலளிப்பு, கலந்துரையாடல் மற்றும் ஊக்கமளிப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்ட பல்வேறு முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பாக அமையவுள்ளது. இதற்கிணங்க, இன்று நிகழும் தொடக்கவிழாவுடன் இணைந்து, "Architects Work, Trade and Exhibition"கண்காட்சியினை அறிமுகப்படுத்துவதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்த கண்காட்சி, கட்டடக் கலையின் சமீபகால வளர்ச்சிகள், புதிய பொருட்கள், மற்றும் வடிவமைப்பு புதுமைகளை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான தளமாக விளங்கும். இந்த நிகழ்வு, கட்டடக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்களுக்கு கட்டடக் கலையின் எதிர்காலத்தை ஆராய்வதற்கும் தொழில்முறை உறவுகளை வலுப்படுத்துவதற்கும் புதிய ஒத்துழைப்புகளை உருவாக்குவதற்கும் ஓர் முக்கிய சந்திப்புத் தளமாக அமையும். இந்த ஆண்டின் கண்காட்சியின் முக்கிய அம்சங்களாக, தொழில் நிறுவனங்களுக்கு வணிகக் காட்சிப்பதிவுகள், பொதுமக்கள் கலந்துரையாடல் மேடை, மாணவர் கண்காட்சி, பொதுமக்களுக்கான தகவல் மையம் மற்றும் மாணவர் பொழுதுபோக்கு பகுதி ஆகியவை அடங்கியுள்ளன. இது புதிய செயல்முறைகள், தொழில் தலைவர்களையும் வழங்குநர்களையும் மற்றும் பொதுமக்களையும் ஒரே மேடையில் ஒன்றிணைத்து, தகவல் பரிமாற்றத்துக்கும் தொழில்துறை உறவுகளுக்கும் வித்திடும்.

இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் வருடாந்த மாநாடுகளின் முக்கிய நிகழ்வாக, வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) இந்த அமர்வுகளின் ஒரு அங்கமாக நடைபெறவுள்ளது. இது எங்கள் உறுப்பினர்களுக்கு, நிறுவகத்தின் சாதனைகளை மதிப்பீடு செய்ய, எதிர்கால உத்தியோகபூர்வ நோக்குகளை நிர்ணயிக்க மற்றும் புதிய தலைமைத்துவ உறுப்பினர்களை தெரிவுசெய்யும் ஓர் முக்கிய தருணமாகும். இவ்வாறான சந்திப்புகள் மூலம், எங்கள் சமூகத்தை வலுப்படுத்துவதற்கும் நிறுவகத்தின் நோக்கங்களை மேலும் முன்னேற்றுவதற்கும் இலங்கையின் கட்டடக் கலைத் துறையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றன.

இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் கௌரவச் செயலராக, இந்த தொடக்கவிழா இணைப்புக்காக இந்தச் செய்தியை வழங்குவதில் நான் மிகுந்த பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நிகழ்வின் அனைத்து அமர்வுகளிலும் நீங்கள் அனைவரும் முழுமையாக பங்கேற்று, புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தொழில்முறை வலையமைப்பை மேம்படுத்தி, இலங்கையின் கட்டடக் கலைத்துறையின் மாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் பங்களிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்விழா மிகவும் பயனுள்ளதும் நினைவுறுதி தரக்கூடியதுமாக அமையும் என எதிர்பார்க்கின்றோம். இலங்கையின் கட்டடக் கலைத்தொழிலின் வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கான இந்த பயணத்தில், அனைவரும் இணைந்து செயற்படுவதை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

**கட்டடக் கலைஞர் தினுக் சேனாநாயக்க,** FIA (SL)
RIBA, MSLAPM

ORGANIZED BY
Sri Lanka Institute of Architects

STRATEGIC SPONSOR
NIPPON PAINT Inspired by you

PRINCIPAL SPONSOR
RHINO 60 YEARS

ALUMEX

EVENT SPONSORS
LANKATILES Fine Living Redefined

SWISSTEK ALUMINIUM FOR THE PERFECT FINISH

FURNITURE PARTNER
SINGER FURNITURE

TILE PARTNER

DOOR LOCKING SYSTEM PARTNER

ROOFING PARTNER
STERLING

RENEWABLE ENERGY PARTNER
SOLAR

MEDIA PARTNERS
NEWS 1st

Sri Lanka Institute of Architects

# ARCHITECT 2025

POLYMATHIC EXCELLENCE
CRAFTING NARRATIVES, DESIGNING TOMORROWS

# அங்குரார்ப்பண நிகழ்வுக்குழுவின் தலைவரின் வாழ்த்துச்செய்தி



அங்குரார்ப்பண நிகழ்வுக்குழுவின் தலைவராக இத் தருணத்தில், Architect 2025 நிகழ்ச்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் குறிப்பாக இந்த சவாலான காலங்களில் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

பெப்ரவரி 20, 2025 அன்று (BMICH) lotus மண்டபத்தில் நடைபெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை அறிவியல் முன்னேற்ற சங்கத்தின் ((Sri Lanka Association for the Advancement of Science) தலைவரான Prof. Udeni P. Nawagamuwa அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வு , புதிய Associateமற்றும் Fellowஉறுப்பினர்களுக்கு மிக முக்கியமான தருணமாக அமைகின்றது. அவர்கள் இவ்விழாவில் தங்களது அதிகாரப்பூர்வ அங்கீகாரச் சான்றுகளைப் (scrolls) பெறவுள்ளனர். மேலும், இந்த புதிய உறுப்பினர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தி அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களையும் இந்நிகழ்வுக்கு வரவேற்கின்றேன்.

மேலும், Architect 2025 Awards 2025 யுறயசனள வழங்கும் நிகழ்ச்சி, இந்த விழாவின் முக்கிய அம்சமாகும். இவ்விழாவில் Design Awards,Panel Awards> product Awards மற்றும் Stall Awards வழங்கப்படவுள்ளன. இந்த விருதுகள், விருதுக்குழுவின் தலைவர் மற்றும் SLIA இன் மூத்த துணைத் தலைவர் (SLIA special awards ) அவர்களால் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மேலும், அன்று ஆறு மூத்த கட்டடக் கலைஞர்களை அவர்களின் சிறப்பு பங்களிப்புக்காக கௌரவித்து SLIA special awards வழங்கவுள்ளோம். இந்த ஆண்டு SLIA special awards ஆக, ஒரு தங்கப் பதக்கம் (SLIA special awards ), இரண்டு வாழ்நாள் சாதனை விருதுகள் (Two Lifetime Achievement Awards) மற்றும் மூன்று சிறப்பு விருதுகள் (Three Special Awards) வழங்கப்படவுள்ளன.

Architect 2025 நிகழ்வின் அனைத்து அனுசரணையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, Nippon Paint Lanka (Pvt) Ltd. அவர்களுக்கு அவர்களின் மிகுந்த ஆதரவுக்கும் அர்ப்பணிப்புக்கும் சிறப்பு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நிகழ்வைச் சிறப்பாக நடத்த உதவிய அனைத்து ஆதரவாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இறுதியாக, துவக்க விழாவின் துணைத்தலைவரான (Co-Chairperson) Archt. Rajika Weerasekara ) அவர்களுக்கும் மற்றும் துவக்கக் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்த அவர்கள் காட்டிய அர்ப்பணிப்பு மற்றும் பாடுபாட்டுக்காக எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

நன்றி!

Architect 2025; சிறந்த நிகழ்வாக மாற்றுவோம்!

**கட்டடக் கலைஞர் உபேந்திர கே பெரும்புலி ஆரச்சி,AIA (SL)**
**M.Sc. (Arch.), B.Sc. (BE)**



2024-2025 கட்டடக்கலை நிர்வாகக் குழுவினர்




WHERE TO FIND THE FINEST CERAMICS AND HOMEWARE IN COLOMBO

inspring spaces with affordable luxury

We are open from 9.00 a.m to 7.00 p.m everyday

Our products
- All kind of Homeware items
- Home Decorations
- All kind of Tiles
- All Kind of Bath-ware items
- Bath-ware Accessories

AMAZING HOMEWARE
No. 84, Nawala Road, Nugegoda.

NEW SUN CERAMICS
No. 04, Narahenpita Road, Nawala
A9, Kandy Road, Kilinochchi

www.newsunceramics.com | www.amazinghomeware.com | Contact Us : 011 28 066 56 / 011 21 999 44

ORGANIZED BY Sri Lanka Institute of Architects
STRATEGIC SPONSOR NIPPON PAINT Inspired by you
PRINCIPAL SPONSOR RHINO 60 YEARS
EVENT SPONSORS ALUMEX, LANKATILES, SWISSTEK ALUMINIUM
FURNITURE PARTNER SINGER FURNITURE
TILE PARTNER ilot
DOOR LOCKING SYSTEM PARTNER KEVIN PRIYANTHA DISTRIBUTORS
ROOFING PARTNER STERLING
RENEWABLE ENERGY PARTNER EBC SOLAR
MEDIA PARTNERS NEWS 1st, Sirasa FM, Sirasa TV

Sri Lanka Institute of Architects

# ARCHITECT 2025

## POLYMATHIC EXCELLENCE

CRAFTING NARRATIVES, DESIGNING TOMORROWS





மாணவர்களுக்காக ஜம்போரி நிகழ்ச்சித் திட்டம் 2024 டிசம்பர் மாதம் 12 முதல் 15 வரை 04 நாட்கள், 03 இரவுகள் என்ற அடிப்படையில் 153 மாணவர்களின் பங்கேற்புடன் சூரியவெவ, ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றிருந்தது. இரண்டாம் நாள் விசேட சமூகப் பொறுப்புணர்வு திட்டம் ஹம்பாந்தோட்டை வெலிவெவ கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்றது. பாடசாலை வகுப்பறைகள், ஒரு பிரதான மண்டபம் மற்றும் நூலகத்துடன் கூடிய அலுவலகம் என்பன நிறம் தீட்டப்படவிருந்தன. வண்ணம் தீட்டப்படவிருந்த கட்டிடங்களுக்கு இடையில் குழுக்கள் பிரிக்கப்பட்டன. நூலகத்தின் மேம்பாட்டுக்காக பல புத்தகங்கள் மற்றும் 04 அலுமாரிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. ஜம்போரிக்கு இணையாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அமர்வும் நடைபெற்றது.













ORGANIZED BY

Sri Lanka Institute of Architects

STRATEGIC SPONSOR

NIPPON PAINT Inspired by you

PRINCIPAL SPONSOR

RHINO 60 YEARS

ALUMEX

EVENT SPONSORS

LANKATILES Fine Living Redefined

SWISSTEK ALUMINIUM FOR THE PERFECT FINISH

FURNITURE PARTNER

SINGER FURNITURE

TILE PARTNER

ilot

DOOR LOCKING SYSTEM PARTNER

KEVIN PRIYANTHA DISTRIBUTORS

ROOFING PARTNER

STERLING

RENEWABLE ENERGY PARTNER

EBC SOLAR By E. B. CREASY & CO., PLC

MEDIA PARTNERS

NEWS 1st

සිරස

සිරස TV

# பருவகாலச் சீட்டை பயன்படுத்துவோரை ஏற்றிச் செல்ல மறுக்கும் இ.போ.ச. ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை




பருவகாலச் சீட்டை (Season ticket) வைத்திருக்கின்ற பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோரை இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் ஏற்றிச் செல்வதைக் கட்டாயமாக்கியுள்ளது.

யாரேனும் ஊழியர் ஒருவர் இந்த பருவகாலச் சீட்டை வைத்திருப்பவர்களை ஏற்றிச்செல்ல மறுத்தால், அது இலங்கைப் போக்குவரத்து சபை கொள்கையின்படி கடுமையான குற்றமாகும்.

பருவகாலச் சீட்டை வைத்திருப்பவர்கள் அனைவரையும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட வேண்டும் என்று அவர்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், அவர்களை ஏற்றிச்செல்ல மறுக்கும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏதேனும் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் பருவகாலச் சீட்டை வைத்திருப்பவர்கள் 1958 என்ற எண்ணை அழைத்து SLTB தகவல் மையத்துக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# ஓடும் ரயிலில் செல்பி எடுக்க முயன்று தவறி விழுந்த ரஷ்ய பெண் உயிரிழப்பு

*(ராமு தனராஜா)*

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி நேற்று(19) காலை பயணித்த ரயிலிலிருந்து தவறி விழுந்த ரஷ்ய நாட்டுப் பிரஜையான பெர்மினோவா ஓல்கா என்ற 51 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள அமுனுவெல்பிட்டிய பகுதியில் உள்ள சுரங்க பாதையை கடந்து ஓடும் ரயிலில் செல்பி எடுத்துக்கொண்டிருந்த குறித்த பெண் ரயில் வீதி ஓரமாக இருந்த கற்களில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அதே ரயிலில் ஹாலி-எல ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பதுளை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பதுளை போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலி-எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாயத்துறை அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் ‘எக மிடட கொவி பிமட’ தேசிய திட்டம் ஆரம்பிப்பு




“எக மிடட - கொவி பிமட” தேசியத் திட்டம் கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னவின் தலைமையில் பொல்கஹவெல ஹொதல்ல ஜயசுந்தர ராம விகாரை அமைந்துள்ள வயல் பகுதியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக உணவு இருப்பை நாட்டினுள் பேணுதல், உணவு நுகர்வுக்கு மேலதிகமாக விவசாயப் பயிர் இணைந்த ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல் போன்றவற்றுக்காக செய்கை பண்ணப்படாத சகல வயல் மற்றும் விவசாய நிலங்களை வேளாண்மை செய்வதற்காக விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துவதற்கு இத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த வின் ஆலோசனைக்கு இணங்க கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் யூ.பி. ரோஹண ராஜபக்ஷவின் பங்களிப்புடன் இத்திட்டம் இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 566 விவசாய சேவை பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மை பண்ணப்படாத வயல் மற்றும் விவசாய நிலங்களின் உரிமையாளர்கள், தங்கி இருப்பவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோருக்கு சொந்தமான நிலங்களில் வேளாண்மை செய்கை பண்ணுவதாக அறிவித்து வீட்டுக்கு வீடு சென்று தெளிவுபடுத்துவதற்காக அறிவித்தல் பத்திரம் வழங்குவதற்கே தீர்மானிக்கப்பட்டதுடன், தெளிவுபடுத்தல் பெப்ரவரி 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இவ் விழிப்புணர்வூட்டல் நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புகளின் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஆலோசனைக்கமைய விவசாய அபிவிருத்தி திணைக்களம் உட்பட விவசாயத் துறையின் சகல அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.







***அஷ்ரஃப் சிஹாப்தீனின் ‘கழுதை மனிதன்’ மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுதி வெளியீடும் புரவலர் இம்ரான் நெய்னாரின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்றது.***

*(படங்கள் – ராமதாஸ்)*

# உழவு இயந்திரம் தலைகீழாக கவிழ்ந்ததில் சாரதி உயிரிழப்பு

*(ரஸீன் ரஸ்மின்)*

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல்பாடு சமாகமதல பகுதியில் நேற்று முன்தினம் உழவு இயந்திரம் ஒன்று தலைகீழாக கவிழ்ந்ததில் அதன் சாரதி உயிரிழந்ததுடன், மற்றொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளிவாசல்பாடு சமாகமதல பகுதியில் நேற்று முன்தினம் கரைவலை தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற உழவு இயந்திரம் அங்கிருந்த படகு ஒன்றை இழுத்தெடுப்பதற்கு முற்பட்டதாகவும் இதன்போது குறித்த உழவு இயந்திரம் திடீரென தலை கீழாக கவிழ்ந்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது உழவு இயந்திரத்துக்குள் சாரதியும் மற்றுமொரு நபரும் நசுங்கி காயமடைந்த நிலையில், அங்கிருந்தவர்கள் அவ்விருவரையும் உடனடியாக கொத்தாந்தீவு கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.



எனினும், உழவு இயந்திரத்தின் சாரதி அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொத்தாந்தீவு கிராமிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பள்ளிவாசல்பாடு கிராமத்தைச் சேர்ந்த 40 வயதுடைய 03 பிள்ளைகளின் தந்தை ஒருவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (19.02.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 184.0794 | 193.5315 |
| கனேடியன் டொலர் | 204.9016 | 213.7157 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3626 | 41.9171 |
| யூரோ | 303.8468 | 316.3835 |
| ஜப்பான் யென் | 1.9161 | 1.9918 |
| சிங்கப்பூர் டொலர் | 216.1377 | 226.0376 |
| ஸ்ரேலிங் பவுன் | 367.5195 | 381.4861 |
| சுவிஸ் பிராங் | 320.9087 | 336.2131 |
| ஐ.அ. டொலர் | 292.5502 | 301.1649 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 785.1096 |
| குவைட் | குவைட் தினார் | 958.1688 |
| ஓமான் | ஓமான் றியால் | 768.5309 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.1775 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.8961 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.5587 |

# அரச வேலைவாய்ப்பு வெற்றிடங்களின் விகிதாசாரத்துக்கேற்ப வடக்கு கிழக்குக்கும் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி. வலியுறுத்து!

*(பு.கஜிந்தன்)*

அரச வேலை வாய்ப்பு வெற்றிடங்களின் விகிதாசாரத்துக்கேற்ப வடக்கு கிழக்குக்கும் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் யாழ். நூலகம் டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

"வரவு - செலவுத் திட்டம் வெளியாவதற்கு முன்னரே, இடதுசாரிக் கொள்கைகளை பின்பற்றுவதாக சொல்லப்படுகின்ற புதிய அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டம் கடந்த காலங்களைவிட வித்தியாசமானதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது.

ஆனால், எம்மை பொறுத்தவரையில் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை உள்வாங்கியே வரவு - செலவுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டிய நிலையிலும் வரவு - செலவுத்திட்டத்தின் உருவாக்கத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களாக திறைசேரி செயலாளர் மத்திய வங்கி ஆளுநர் போன்றோர் கடந்த அரசாங்கத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில், கடந்த வருட வரவு - செலவுத் திட்டத்தை ஒத்த வரவு - செலவுத் திட்டம் ஒன்றே வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக எதிர்பார்த்திருந்தோம். பெரும்பாலும் அவ்வாறான வரவு - செலவுத் திட்டம் ஒன்றே வெளியாகியிருக்கின்றது.

இந்நிலையில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை பொறுத்தமட்டில், கிடைக்கின்ற வாய்ப்புகளை தவற விடாமல் பயன்படுத்தி, முன்னோக்கி செல்லுகின்ற தரப்பு என்ற அடிப்படையில் தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள், வெறுமனே எழுத்தில் மட்டும் இல்லாமல், செயலிலும் அமையவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

குறிப்பாக, வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள நிதிகள் சீரான முறையில் ஒதுக்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாணத்தின் வீதிகளை புனரமைப்பதற்கு 5000 மில்லியன் ரூபா முன்மொழியப்பட்டுள்ளது.




வடக்கை பொறுத்தவரையில் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான வீதிகளை முழுமையாக திருத்துவதற்கு சுமார் 10,000 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அவற்றுள் வட்டுவாகல் பாலம் மற்றும் குறிகட்டுவான் இறங்குதுறை போன்றவை உள்ளடக்கப்படவில்லை. ஆனால் தற்போது வட்டுவாகல் பாலம் மற்றும் இறங்குதுறை உள்ளடக்கி 5000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே முன்னுரிமை அடிப்படையில் வீதிகள் தெரிவுசெய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பூநகரி கௌதாரிமுனை வீதி, கிராஞ்சி, வலைப்பாடு போன்ற பகுதிகளுக்கான வீதி போன்ற பிரதான வீதிகளும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

அதேபோன்று, யாழ். நூலகத்துக்கு முன்மொழியப்பட்டுள்ள 100 மில்லியன் ரூபாவும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும் கணினி வசதிகளை அதிகரிப்பதற்காகவும் முன்மொழியப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது. அதைவிட, தென்னாசியாவில் சிறந்த நூலகமாக காணப்பட்ட எமது நூலகத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்துவதன் மூலம் தென்னாசியாவின் தலைசிறந்த நூலகங்களுள் ஒன்றாக விளங்கிய எமது நூலகத்துக்கு இன்னுமொரு பரிமாணத்தை வழங்கமுடியும் என்பதே எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் சிந்தனையாக இருக்கின்றது. இதனை வலியுறுத்தி எமது செயலாளர் நாயகம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றினை எழுதயிருக்கின்றார். அதேபோன்று, 30 ஆயிரம் அரச நியமனங்கள் வழங்கப்பட இருப்பதாக சொல்லப்பட்டிருக்கின்றது.

அவை வழங்கப்படுமாயின், நாடளாவிய ரீதியில் இருக்கின்ற வெற்றிடங்களின் விகிதாசாரத்துக்கேற்ப அந்த நியமனங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன், வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுகின்றபோது, தமிழ் மொழிப் பரீட்சயம் உள்ளவர்களுக்கும் எமது மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு கடமையாற்றக் கூடியவர்களுக்கும் முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

ஏன் இதனை வலியுறுத்துகின்றோம் என்று சொன்னால், நல்லாட்சி காலப்பகுதியில், பல்வேறு திணைக்களங்களுக்கு வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக மின்சார சபைக்கு பெருமளவானோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பாக மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான பிரதான சேவை நிலையத்தில் 12 பணியாளர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் தற்போது 04 பணியாளர்கள் மாத்திரம் கடமையாற்றி வருகின்றனர். அங்கு நியமிக்கப்பட்டவர்கள் இன்று இடமாற்றம் பெற்று தங்களுடைய சொந்த மாவட்டங்களுக்கு சென்றுவிட்டனர்.

ஆனால் நாங்கள் ஆளுந்தரப்பாக இருந்த காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளித்திருக்கவில்லை. எனவே இந்த விடயத்தில் ஆளுந்தரப்பை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஆக, இந்த வரவு - செலவுத் திட்டம் எமது மக்களுக்கு நன்மையளிக்குமா இல்லையா என்பதற்கு அப்பால், கிடைத்திருப்பவற்றை சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அந்தவிடயத்தில், எமது மக்களினால் பாராளு மன்றத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டவர்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது தாக்குதல் முயற்சி; அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதினெட்டாம் போர் பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபடுவோர், ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது தாக்குதல் முயற்சியை மேற்கொண்டுள்ள சம்பவத்தை அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாக கண்டித்துள்ளது.

ஏ - 9 வீதியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் காட்டுப் பகுதியில் மணல் கொண்டு வந்து குவிக்கப்படுவதை காணொளி பதிவுசெய்து கொண்டிருந்தபோது NP BFR 8429 மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் ஊடகவியலாளர் தவசீலனின் ஒளிப்படக்கருவியை பறிக்க முற்பட்டு ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொண்டதோடு கொலை அச்சுறுத்தல் விடுத்த நிலையில், மாங்குளம் பொலிஸாரின் உதவியுடன் தவசீலன் குறித்த இடத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

காட்டுக்குள் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவது மாத்திரமின்றி அங்கு வருகைதந்து யார் வீடியோ எடுக்கச் சென்னது என்றும் வீடியோ எடுக்க விடாது தடுத்து சட்டவிரோத மணலுடன் நின்ற உழவு இயந்திரத்தை அந்த இடத்திலிருந்து எடுத்துச் சென்றதோடு ஊடகவியலாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கவனத்துக்கு கொண்டுவந்தபோது, இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

எனினும், இது சாதாரண விடயமாக கருத்துக்கொள்ளப்படாமல் ஊடகர் தவசீலனின் வாழ்வு சம்பந்தமான பிரச்சினையாக கருதப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சட்டவிரோத செயற்பாடுகளை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்த முடியாத நிலைமை இருக்குமாயின் அது ஆபத்தானது.

தேசிய மக்கள் சக்தி அரசு, ஜனநாயக விழுமியங்களை பேணும் ஆட்சி என்ற வகையில், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வலியுறுத்திக்கூற விரும்புகிறது.

# பேசத் தவறாதீர்கள்!

இன்றைய உலகில் ஒவ்வொரு உரையாடலும் முக்கியமானவை. உலக அளவில் முன்பை விட அதிகளவில் நாம் இணைக்கப்பட்டுள்ளோம். தொழில்நுட்பத்துக்கு நன்றி. ஆனாலும், குறுஞ்செய்தி மற்றும் செய்தி அனுப்பும் செயலிகள் மனிதருக்கிடையிலான நேரடி உரையாடலைச் சுருக்கி விட்டன. நேரில் தொடர்பாடல்கள் தரும் மன நிறைவையும் உணர்வையும் மின் செய்திகள் வழங்கத் தவறிவிட்டன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

உரையாடல் என்பது உயிர்களுக்கே உள்ள குணம். அது சார்ந்து தான் உணர்வுகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஒருவரின் கண்களின் தொடர்புகள் கூட புரிதலைச் செயற்படுத்துகின்றன, கருணையை உருவாக்குகின்றன, கோபம் உணர்த்தப்படுகின்றது,

மற்றவர்களைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்துகின்றன. புற உலக எதிர்வினைகளை அறியத் தருகின்றன. தொடர்பாடல் மூலம் மற்றவர்களைப் பற்றியும் நம்மைப்பற்றியும் கற்றுக்கொள்கிறோம்.

நேரடித் தொடர்பாடல்கள், உறவுகளை வடிவமைப்பதிலும் இணைப்புகளை உருவாக்குவதிலும் நம்பிக்கையை வளர்ப்பதிலும் மிக முக்கியமானவை. சவால்களைச் சமாளிக்கவும் தீர்வுகளை உருவாக்கவும் சமூக நுண்ணறிவுகளைப் பயன்படுத்தவும் அவை உதவுகின்றன.

சமுதாயத்தில் தொடர்பாடல்கள் பல்வேறுபட்டவை:

குழந்தைகள் மற்றும் பெற்றோர்க் கிடையில் உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சிக்கு ஆரம்பகால தொடர்பாடல் அவசியம். அன்றாட தொடர்பாடல்கள் குழந்தையின் பாதுகாப்பான, அந்நியப்படுத்தப்படாத மற்றும் நம்பிக்கையுடன் கூடிய உணர்வை வலுப்படுத்துகின்றன.

சிறார்களுக்கு அவர்களின் நண்பர்களுடனான தொடர்பாடல்கள், கணிசமாக மன வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன. உறவுகளை நிர்வகிக்கவும் மோதல்களை வழிநடத்தவும் ஒருவருக்கொருவர் அந்நியோன்யமாக இருக்கவும் கோபத்தைத் தணிக்கவும், சமரசமாகவும் நியாயங்களைப் புரிந்து கொள்ளவும் குழந்தைகளுக்கு அவை உதவுகின்றன.

குடும்பங்களுக்குள் திறந்த தொடர்பாடல் முக்கியமானது. திறந்த மனதுடன் உரையாடுவது பிணக்குகளைத் தீர்க்கவும் சிக்கல்களுக்கு முடிவு காணவும் வழிவிடும்.

தொழில் சார்ந்த உறவில் செயற்படுவோர் (ஆசிரியர்கள், இளைஞர் தொழிலாளர்கள், மருத்துவர்கள் மற்றும் பிற சேவை வழங்குநர்கள்): தொழில்சார் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அனைத்து தரப்பினருக்குமிடையிலான திறந்த தொடர்பாடல் முக்கியமானது. பல்வேறு அமைப்புகளில் இருப்போர் பொருத்தமான ஆதரவைப் பெறுவதை தொழில்சார் திறந்த தொடர்பாடல்கள் உறுதி செய்கின்றன.

நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடையே சமூகத் தொடர்பாடல்கள் ஒரு பரந்த ஆதரவு நட்பு வலைப்பின்னலை வழங்க முடியும். இந்தத் தொடர்புகள் குடும்பத்துக்கப்பால் பாதுகாப்பு வலையை விரிவுபடுத்துகின்றன. கூடுதல் ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குகின்றன.

முன் பின் தெரியாத ஒருவருடன் உரையாடலைத் தொடங்குவதில் தவறேதுமில்லை. நமது ஒரு சிறிய உரையாடல் அவர்களின் நாளை அல்லது நமது நாளை பிரகாசமாக்கலாம். அதனால் பேசத் தவறாதீர்கள்.

டாக்டர் சந்திரிகா சுப்ரமணியன்
அவுஸ்திரேலியா.

# கணக்கு நேர்

"தங்கராசு அண்ணன் நாலு தடவ போன் பண்ணிட்டாரு. நீங்க போனை சார்ஜ்ல போட்டுட்டு அப்படி எங்க தான் போயிருந்தீங்க?" – கேட்டாள் சீதா.

"அப்படியே காலாறப் போயிருந்தேன். இப்ப என்ன வேணுமா அவனுக்கு? – என்று எரிச்சலோடு சோபாவில் அமர்ந்தான் தண்டாயுதபாணி.

"ஏன் அவர் எதுக்கு போன் பண்ணுவாருன்னு உங்களுக்குத் தெரியாதா?" – சீதாவும் எகிறினாள்.

"தெரியும், சும்மா பணம் பணம்னு கேட்டா எங்க போவேன்? மனுசன கொஞ்ச நேரம் கூட நிம்மதியா இருக்க விடமாட்டேங்கறான். போய் சூடா ஒரு காபி போட்டு எடுத்துட்டு வா போ" – என்று விரட்டினான்.

"ஆமா இப்ப டென்ஷனாகி என்ன பிரயோசனம்? தங்கராசு அண்ணாகிட்ட பணம் வாங்கும்போது இனிச்சுதாக்கும்"

"இங்கப் பாரு சீதா, நானே டென்ஷனா இருக்கேன். இப்ப அந்தக் கடங்காரனப் பத்திப் பேசாத போயிடு"

"என்னமோ பண்ணித் தொலைங்க. இனிமே எங்கப் போனாலும் அந்தப் பாழாப்போன செல்போனையும் கூடவே எடுத்துக்கிட்டுப் போயிடுங்க சொல்லிட்டேன். அது இங்க இருக்கவும் தானே என்ன கத்துது, எதுக்கு கத்துதுன்னு பார்க்க வேண்டி இருக்கு?" – என்று அவனை மேலும்



எரிச்சலூட்டினாள்.

"ஐயோ சாமி, போய் காபி போட்டு எடுத்துட்டு வரியா?" – என்று பலமாகக் கத்தினான்.

சிறிது நேரத்தில் காப்பியுடன் வந்தாள் சீதா.

சோபாவில் சாய்ந்து கண்களை மூடி இருந்தவனைத் தட்டி எழுப்பி காபியை நீட்டிக்கொண்டே, "இங்க பாருங்க இனிமே அந்த தங்கராசுக் கிட்ட பணம் எதுவும் நீங்க வாங்கக்கூடாது. ஒழுங்கா வாங்கிய அம்பதாயிரத்தையும் திருப்பிக் கொடுத்துடுங்க" – என்றாள்.

காபியை வாங்கியவன், "என்னடி புரியாம பேசிகிட்டு இருக்க? நான் என்ன தண்ணி அடிக்கவா அவங்கிட்ட கடன் வாங்கினேன்? நம்ம பொண்ணுங்கள ஸ்கூல்ல சேக்கத்தானே வாங்குனேன்? சரி வியாபாரம் நல்லாப் போகுதே எப்படியும் கொடுத்திடலாம்னு வாங்கினேன். ஆனா வியாபாரம் டல்லடிக்குது. அதான் தர முடியல. நான் என்ன வச்சுக்கிட்டா வஞ்சனை பண்றேன்?"– என்றான்.

"அது சரி நல்லா இருக்குது நியாயம். அவரென்ன அவர் பணத்தையாக் கொடுத்தார்? பாவம், அவரே கடன் பட்டு கஷ்டப்பட்டுகிட்டு கிடக்குறாரு. நீங்க அவர்கிட்ட போய் கால்ல விழுந்தா? நண்பனாச்சே இப்படி கதறுறானேன்னு இரக்கப்பட்டு வட்டிக்குக் கடன் வாங்கிக் கொடுத்தாரு. இப்ப நாம கட்ட வேண்டிய வட்டியையும் அவரே கட்டிக்கிட்டு இருக்காரு. பாவமில்ல?"

"என்னடி? திடீர்னு அவனுக்கு வக்காளத்து வாங்குற. நாம ஏற்கனவே கந்துவட்டிகாரன் ஒருத்தங்கிட்ட பதினஞ்சாயிரம் வாங்கினோமே? அவன் நேத்து என் சட்டையை பிடிச்சி கேட்காத குறையா கேட்டுட்டான். "

நான் அவனுக்கு என்ன பதில் சொல்றதுன்னு புரியாம இருக்கேன். நீ என்னமோ அந்த தங்கராசுப் பயலப்பத்தி பேசிகிட்டு இருக்க? "

"அப்ப அந்த தங்கராசுக்கு என்னதான் பண்ண போறீங்க?"

"இரு நான் அவனுக்குப் போன் போட்டு உன்கிட்ட தரேன். நீயே பேசு ஒரு பதினஞ்சாயிரம் யாருகிட்டயாச்சும் வாங்கி தரச்சொல்லு. அவன்கிட்ட வாங்கித் தான் கந்துவட்டிக்காரன் கடனை அடைக்கலாம்னு இருக்கேன்."

"ஐயோ என்னால முடியாது. தங்கராசு நான் கேட்டதும் கொடுத்துடுவாரா என்ன? அவரே, வட்டி கட்ட முடியல சீக்கிரம் நான் வாங்கிக் கொடுத்த பணத்தை திருப்பி கொடுங்கன்னு கேட்டுகிட்டு இருக்காரு ஆரேழு மாசமா."

"அதான்டீ நானும் சொல்றேன். அந்த தங்கராச விட்டா நமக்கு வேற இளிச்சவாயன் கிடைக்க மாட்டான். நீ எப்படி அவன் கிட்ட பேசுறனா? ஒரு பெரிய ஆர்டர் கிடைச்சிருக்கு. அதுக்கு சாமான்கள் ரெடி பண்ணனும்னா இப்ப அவசரமா ஒரு பதினஞ்சாயிரம் தேவை இருக்கு. அதை கொடுத்தீங்கன்னா பத்தே நாள்ல உங்கக்கிட்ட வாங்கின எல்லா பணத்தையும் வட்டியோட திருப்பி கொடுத்துவிடுவோம். என்னய நம்பி கொடுங்க. இந்த ஆர்டர் மட்டும் இல்லாம போச்சுன்னா அப்புறம் உங்களுக்கு எங்களால பணமே கொடுக்க முடியாம போயிடும் அப்படின்னு பேசுடி. அவன் இளகுன மனசுக்காரன் பட்டுன்னு விழுந்துடுவான்.

உடனே யாரு கைல கால்லயாச்சும் விழுந்து பணத்த ரெடி பண்ணி நம்ம அக்கவுண்ட்ல போட்டுடுவான். அப்புறம் நம்ம கிட்ட வழக்கம் போல கெஞ்சிக்கிட்டே கிடப்பான்" என்று சிரித்தான் தண்டாயுதபாணி.

"என்னால முடியாது" – என்ற அவளை மல்லுக்கட்டி சம்மதிக்க வைத்தான். அவளும் தங்கராசுவிடம் அதேபோல் பேசினாள். தங்கராசும் மனம் இளகினான். அடுத்த ஒரு மணி நேரத்தில் தண்டாயுதபாணியின் வங்கிக் கணக்கில் பதினஞ்சாயிரம் ரூபா வந்து விழுந்தது.

சில நாட்கள் கழிந்திருந்தன. தங்கராசுவின் வீட்டில் அவனது மனைவி லட்சுமி கேட்டாள்.

"என்னங்க அந்த தண்டாயுதபாணி பணம் திருப்பி கொடுத்துட்டாரா? இல்லையா?" கொஞ்சம் கோபமாகவே கேட்டாள்.

நல்லவேளை இவளுக்கு அம்பதாயிரம் நாம கொடுத்தது தான் தெரியும். அதுக்கப்புறம் பதினஞ்சாயிரம் கொடுத்தது தெரியாது என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டிருந்தவர் லட்சுமியிடம் திரும்பி,

"எப்பக் கேட்டாலும் ஏதாவது ஒரு பதில் சொல்லிட்டு இருக்காரு. என்னாலயும் அவருகிட்ட அலைய முடியல லட்சுமி. என்ன பண்றது பாவம் ரெண்டு பொம்பள புள்ளைய வெச்சுக்கிட்டு கஷ்டப்படுறாரு."

"நாம என்ன மாடமாளிகையிலயா வாழுறோம்? நம்ம கஷ்டத்தை யாருகிட்டப் போய் அழறது? "

"சரி விடு லட்சுமி, அவருக்கு ஒரு நல்ல வழி பொறந்து கைல பணம் புரண்டுச்சின்னா நமக்குத் தர வேண்டியத தந்துடுவாரு" என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டு வெளியில் கிளம்பினார் தங்கராசு.

"எங்க கிளம்பிட்டீங்க?"

"கடைத்தெரு வரைக்கும் போயிட்டு வரேன்" – என்று தனது இருசக்கர வாகனத்தை கிளப்பினார். எதிர்பாராத விதமாக ஒரு திருப்பத்தில் வந்த லாறி மோதியதில் தங்கராசுவின் தலையில் அடிபட்டு அந்த இடத்திலேயே பரிதாபமாக உயிரைவிட்டார்.

விபரம் அறிந்த தண்டாயுதபாணிக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் கடனை திருப்பிக் கேட்க ஆளில்லை என்று உள்ளூர மகிழ்ச்சி உண்டானது.

இறப்புக்குப் போய் அழுது புரண்டுவிட்டு வந்து வீட்டில் நிம்மதியாகத் தலைமுழுகினான்.

ஒரு மாதம் கழிந்திருந்தது. சீதா ஆரம்பித்தாள்.

"என்னங்க பாவம் அவரு. அவர் கொடுத்த பணத்தை அவரோட மனைவி கிட்டத் திருப்பிக் கொடுத்துடலாம்"

"ஏன்டீ தொணதொணங்குற? அவனோட பொண்டாட்டிக்கு நாம பணம் வாங்குன விஷயமே தெரியாது" – என்று வில்லத்தனமாக சிரித்தான்.

"அவர் எப்படியும் சொல்லி இருப்பாருங்க. வேணும்னா முழுசா கொடுக்க வேணாம். சும்மா ஒரு பத்தாயிரம் கொண்டு போய் கொடுத்து கணக்கு நேராயிட்டதுன்னு சொல்லிட்டு வந்துருவோம். வாங்க நானும் வரேன்"

"என்ன சீதா நீ?" என்று யோசித்தவன், "சரி பத்தாயிரம் தான் தருவேன். அதுக்கு மேல ஒரு பைசா தரமாட்டேன்" – என்று கிளம்பினான்.

லட்சுமி வீட்டில் இருந்தாள்.

தங்கராசுவின் புகைப்படத்துக்கு மாலையும் பொட்டும் வைக்கப்பட்டிருந்தது.

"அம்மாடி லட்சுமி, உன் புருஷன் கிட்ட நான் கொஞ்சம் கடன் வாங்கி இருந்தேன்மா. அத வட்டியோட திருப்பிக் கொடுத்திடலாம்னு வந்தேன்" – என்று பவ்வியமாகத் தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்த பத்தாயிரம் ரூபாவை எடுத்து நீட்டினான்.

அதை வாங்காமல் தங்கராசுவின் புகைப்படத்துக்கு கீழே மேசையில் இருந்த ஒரு டைரியை எடுத்துப் புரட்டினாள் லட்சுமி.

அதைப் பார்த்த இவர்கள், "எல்லாத்தையும் தெளிவா எழுதி வச்சிருப்பான் போலிருக்கே" என்று அதிர்ச்சியடைந்தார்கள்.

புரட்டிய பக்கத்தோடு வந்து டைரியை தண்டாயுதபாணியிடம் நீட்டினாள் லட்சுமி.

அதில் தங்கராசு எழுதியிருந்தவை,

"தண்டாயுதபாணியிடம் பணத்தை திருப்பி வாங்க வேண்டாம். நம்மிடம் இருக்கும் நகைகளை விற்று நாம் வாங்கிய கடன்களை அடைத்துவிடலாம். அவன் குழந்தைகளுக்காகத்தானே வாங்கினான். நம் பிள்ளைகளுக்கு செலவு செய்ய மாட்டோமா? அவர்களும் நம் பிள்ளைகள் போலத்தானே? கணக்கு நேர் என்று எழுதியிருந்தார்.

வாசித்த இருவருக்கும் தலை சுற்றியது.

**செந்தில்குமார் அமிர்தலிங்கம்**
**நன்றி – மாலைமலர்**



# வைரஸாகப் பெருகும் தற்கொலைகளும் உயிரின் வலிகளும்…

தற்கொலை எனப்படுவது விருப்பத்துடன் ஒருவர் கொலை செய்து கொள்ளல் அல்லது தனது உயிரை மாய்த்துக்கொள்ளும் செயலாகும். இது சிறுவர் முதல் பெரியோர் வரை நிகழும் நிகழ்வாகும். ஒன்றோ அல்லது பல காரணங்களோ தற்கொலைக்குத் தூண்டலாம். எமது உடல் தாங்கும் இந்த உயிரானது என்றோ ஒரு நாள் பிரியத்தான் போகின்றது. மானிடராக பிறந்த ஒவ்வொருவரும் இறப்பது நிச்சயமே. ஆம், இவ்வாறு இயற்கையின் விதியில் பிரியும் இவ்வுயிரை ஏன் பலவந்தமாக மாய்த்துக் கொள்ள வேண்டும்?

தற்கொலையைத் தூண்டுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அதில் குடும்பக் காரணிகள், சமூகக் காரணிகள், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவை பெரும்பாலும் காணப்படுகின்றன. ஆம், ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வகையில் தற்கொலை தொடர்பான செய்திகளை நாம் அறிகின்றோம். எதனால் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுகின்றன என சற்று ஆழ்ந்து நோக்கினால் உயிரியல், உளவியல், சமூகவியல் காரணங்கள் இதற்குப் பின்னணியில் உள்ளன.

மன அழுத்தமே 90% ஆன தற்கொலைகளுக்கு காரணமாக அமைகின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. எமது சமூகத்தில் இவ்வாறான மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியுமா? உளவியல் ரீதியான பிரச்சினைகள் இன்றைய தலைமுறையினருக்கு அதிகமாகக் காணப்படுகின்றன. ஏன் இவர்களால் சவால்களைச் சமாளிக்க முடிவதில்லை? இவர்கள் ஏன் தமது இறுதி முடிவாக தற்கொலையைத் தெரிவு செய்கின்றனர்? ஒருவர் தன்னை மாய்த்துக் கொண்ட பிறகு அவரின் பிரச்சினைகளை ஆய்வு செய்யும் எமது சமூகம் ஏன் அவரது உளவியல் மாற்றங்களை, அவரது செயற்பாடுகளின் மாற்றங்களை அறிந்து அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில்லை?

நவீன உலகில் வாழும் நாம் நவீன ஊடகங்களுக்கேற்ற வகையில் எமது செயற்பாடுகளையும் இயந்திரமயமாக்கிக் கொண்டோம்; எமது வாழ்நாளில் சந்தோஷமான தருணங்களை அனுபவிக்கத் தவறுகின்றோம்; எமது உளவியல் பிரச்சினைகளை ஏனையோருடன் பகிர்ந்துகொள்ள மறுக்கின்றோம்; அவ்வாறு பகிர்ந்து கொள்வதை எமக்கான அவமானங்களாகக் கருதுகின்றோம்; இதனால் பல்வேறுபட்ட உளவியல் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றோம். இதனால் நோய்வாய்ப்படுகின்றோம். எமது சிந்திக்கும் ஆற்றல் குறைகின்றது. மூளையின் செயற்பாடுகள் குறைகின்றன. எமது செயற்பாடுகளில் மந்தநிலை ஏற்படுகின்றது. எனவே, தற்கால இயந்திரமயமாக்கப்பட்ட எமது வாழ்வின் சுகதுக்கங்களை எமக்கு நம்பிக்கையானவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். மற்றோர் கூறும் கருத்துகளை செவிமடுக்க வேண்டும். இதனால் எமது மன அழுத்தம் ஓரளவு குறைக்கப்படும்.

ஒவ்வொரு குடும்பங்களிலும் மன அழுத்தத்துக்கு ஆளானவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். அதற்கான சிகிச்சையாக குடும்பத்தின் ஒற்றுமை, மகிழ்ச்சி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வீட்டில் உள்ளவர்களின் தேவைகள் பூரணப்படுத்தப்படல், சந்தேகமின்மை, ஆரோக்கியம், அன்பு, அரவணைப்பு, பொருளாதாரம் என்பன காணப்படுகின்றன.

இவற்றைக் கவனத்திற்கொண்டு செயற்படும் போது குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லிணக்கப்பாடு ஏற்படும். எதிர்மறையான எண்ணங்கள் தோன்றாது. இது தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் இருப்பவரை சற்றுச் சிந்திக்கச் செய்யும்.

தற்கொலை முயற்சியில் ஒரு முறை ஈடுபட்டவர் எதிர்காலத்தில் மீண்டும் தற்கொலை முயற்சி மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன. எம்மால் தற்கொலையைத் தடுக்க இயலுமா? ஆம். மன உளைச்சலுக்கு ஆளானவர்களை இனம்கண்டு கொள்வதன் மூலமும் தனது பிள்ளைகளை முறையாக வழிநடத்துவதன் மூலமும் தற்கொலை முயற்சிகளைத் தடுக்க முடியும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை – சமூக சூழ்நிலைகளை சமாளிப்பவர்களாகவும் எதிர்காலத்தில் அவர்களுக்கேற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கும் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் முறையான – தெளிவான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். தற்கொலை செய்து கொண்ட பின் தனது குடும்பம் எதிர்கொள்ளப் போகும் பிரச்சினைகள் பற்றிப் பேச வேண்டும். சமூகமட்டத்தில் இந்நிகழ்வு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். எமது சமூகத்தில் ஒருவரினது சடுதியான மாற்றங்கள் அவதானிக்கப்பட வேண்டும். அதற்கான காரணங்களை அறிந்து தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை அவரிடம் ஏற்படுத்த வேண்டும். அவர்களிடமுள்ள எதிர்மறையான எண்ணங்களை அகற்ற வேண்டும். இவ்வாறு நாம் செய்யும்போது அவர்களிடமுள்ள தற்கொலை தொடர்பான எண்ணங்கள் முறியடிக்கப்படுகின்றன. எனவே, மனிதாபிமான முறையில் செயற்பட்டு தற்கொலை எனும் சொல்லை அகராதியிலிருந்து நீக்குவோம்.



**முருகையா தவமணி தேவி**
**வட்டகொட**



# பாப்பரசர் பிரான்சிஸின் உடல்நிலை மோசம்

கத்தோலிக தலைமை மதகுரு, பாப்பரசர் பிரான்சிஸுக்கு (வயது 88) மூச்சுக் குழாய் அழற்சி (பிராங்கைடஸ்) பாதிப்புக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இருந்ததை விட தற்போது பாப்பரசரின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாகவும் அவரது நுரையீரலின் 02 பகுதிகளிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# "சட்டவிரோதமாக குடியேற நினைத்தால் இதுதான் நிலை..."

## அதிர்ச்சி வீடியோவை வெளியிட்டு அமெரிக்கா எச்சரிக்கை



அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்போர் நாடு கடத்தப்படும் நடவடிக்கையை அந்நாட்டு அரசு முன்னெடுத்துவரும் நிலையில், நேற்று (19) அமெரிக்காவில் நாடு கடத்தப்படும் சட்டவிரோத குடியேறி ஒருவர், விமானத்தில் ஏறுவதற்கு தயாராகும் வீடியோவை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. ''சட்டவிரோதமாக குடியேற நினைத்தால் இதுதான் நிலை...'' என வெள்ளை மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுமார் 41 விநாடிகள் கொண்ட இந்த வீடியோவில், அதிகாரியொருவர், கட்டப்பட்ட ஒருவரை நாடு கடத்தல் விமானத்தில் ஏற தயார்படுத்தும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

குறித்த அதிகாரி, கூடையொன்றிலிருந்து சங்கிலிகள் மற்றும் கைவிலங்குகளை வெளியே எடுக்கிறார். இந்த வீடியோவுக்கு, தொழிலதிபர் எலான் மஸ்க் ''ஹாஹா வாவ்..'' என கருத்துத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடு கடத்தப்பட்ட இந்தியர்களை அமெரிக்க அதிகாரிகள் சங்கிலியால் கட்டிய வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "உக்ரைன் நேட்டோவில் இணையக்கூடாது"

## சவூதியில் உறுதியாகச் சொன்னது ரஷ்யா

''உக்ரைன் நேட்டோ அமைப்பில் சேர்வதை அனுமதிக்க முடியாது'' என சவூதியில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது ரஷ்யா மீண்டும் உறுதியாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ''தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஸெலென்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி புட்டின் தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் கனடா உள்ளிட்ட 32 நாடுகள் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளன. இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பைக் காப்பதே தனது நோக்கமென்று நேட்டோ தெரிவித்துள்ளது.

நேட்டோவில் இணைய உக்ரைன் முடிவு செய்த நிலையில், இதனால் தமக்கு ஆபத்து ஏற்படுமென்று கருதிய ரஷ்யா, உக்ரைன் மீது கடந்த 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இந்தப் போர் தொடங்கி 03 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் இன்று (20) 1,092ஆவது நாளாகவும் போர் தொடர்கிறது.

இந்நிலையில், அந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர, சவூதி அரேபியாவில் நேற்றுமுன்தினம் (18) அமெரிக்க, ரஷ்ய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சமீபத்தில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் தொலைபேசியில் பேசினார். இதைத் தொடர்ந்து, உக்ரைன் மீதான போரை நிறுத்துவது தொடர்பான விவாதம் தொடங்கியது.

இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்க்கோ ரூபியோ, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், ரியாத்தில் சந்தித்து பேசினர். அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ், அமெரிக்கத் தூதுவர் ஸ்வீட் விட்கோவ் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் இடம்பெற்றிருந்தனர். சவூதி அரேபியாவின் முயற்சியில் நடந்த இந்தப் பேச்சு, 04 மணி நேரம் நீடித்தது. அப்போது மூன்று முக்கிய விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. முதலில் இரு தரப்பு உறவுகளிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக பேசப்பட்டது. உக்ரைன் மீதான போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது, அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகளை மீண்டும் புதுப்பிப்பது ஆகியவை தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டன.



இந்நிலையில் இச்சந்திப்பின் போது, ''நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பதை பொறுத்துக் கொள்ள முடியாது'' என்ற தனது நிலையில் உறுதியாக உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் லாவ்ராவ் தெரிவிக்கையில்,

''நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பது என்பது உக்ரைனின் கூட்டாட்சிக்கும் இறையாண்மைக்கும் விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தல் என்பதை ஜனாதிபதி புட்டின் ஏன் தொடர்ந்து கூறி வருகிறார் என்பதை விளக்கினோம். இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது. அர்த்தமுள்ளதாகவும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு விதிகளை வகுக்கவும் ஒப்புக் கொண்டோம்'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரூபியோ தெரிவிக்கையில்,

''ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் முடிவுக்கு வந்தால், பொதுவான நலன் சார்ந்த பிரச்சினைகளில் புவிசார் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உலகுக்கு நல்லது. எமது உறவை நீண்ட காலத்துக்கு மேம்படுத்தும். இந்த சந்திப்பின் போது, மாஸ்கோ மற்றும் வொஷிங்டனில் உள்ள இரு நாட்டுத் தூதரகங்களில் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் அமைதி பேச்சுவார்த்தைக்கு உயர் மட்டக் குழுவை ஏற்படுத்துவதுடன், பொருளாதார ரீதியிலான வாய்ப்புகளை தேடவும் ஒப்புக் கொண்டோம்'' - என்றார்.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

இந்நிலையில் ''தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஸெலென்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி புட்டின் தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவிக்கையில், "தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி புட்டின் தெரிவித்துள்ளார்" - என்றார். முன்னதாக, "உக்ரைன் பங்கு பெறாமல் மேற்கொள்ளப்படும் எந்த அமைதி ஒப்பந்தத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்" என ஸெலென்ஸ்கி தெரிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

பிரான்ஸின் மார்சே நகரில் நடைபெற்ற ஓபன் 13 டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் செர்பியாவின் மெத்ஜெடோவிச்சை 7:6 (7:4), 6:4 என வீழ்த்திய பிரான்ஸ் வீரர் யூகோ ஹம்பர்ட் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

★★★★★★★★★★★★★★★

நெதர்லாந்தில் நடைபெற்ற ரோட்டர்டாம் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் இரட்டையர் பிரிவின் இறுதிச்சுற்றில் இத்தாலியின் சிமோனே பொலேலி, ஆன்ட்ரியா வவசோரி ஜோடி, போலந்தின் ஜேன் ஜைன்ஸ்கி, பெல்ஜியத்தின் சாண்டர் கில்லி ஜோடி உடன் மோதியது. இதில் இத்தாலி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

★★★★★★★★★★★★★★★

கட்டாரின் தோஹாவில் நடைபெற்றுவரும் கட்டார் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செர்பியா வீரர் நோவாக் ஜோகோவிச் 4:7, 2:6 என்ற கணக்கில் இத்தாலி வீரரான மேட்டியோ பெரெட்டினியிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறினார்.

★★★★★★★★★★★★★★★

ஜனவரி மாத சிறந்த வீர மற்றும் வீராங்கனை விருதை வென்றவர்கள் விவரங்களை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. அதன்படி, சிறந்த வீரர் விருதை வெஸ்ட் இண்டீஸின் ஜோமல் வாரிக்கனும் சிறந்த வீராங்கனை விருதை ஆஸி. யின் பெத் மூனியும் வென்றுள்ளனர்.

# நியூஸிலாந்துடன் மோதும் இலங்கை மகளிர் குழாம் அறிவிப்பு



இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியானது நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களில் விளையாடவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான சமரி அதபத்து தலைமையிலான 16 பேர் அடங்கிய இலங்கை மகளிர் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர்கொண்ட இலங்கை குழாத்தில் ஹர்சிதா சமரவிக்ரம, விஷ்மி குணரத்ன, நிலக்ஷி டி சில்வா, கவீஷா டில்ஹாரி மற்றும் அனுஷ்கா சஞ்சீவனி போன்ற முன்னணி வீராங்கனைகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஒருநாள் தொடர் மார்ச் 04ஆம் திகதியும் ரி20 தொடர் மார்ச் 14ஆம் திகதியும் ஆரம்பமாகிறது. தொடருக்கான இலங்கை குழாம் எதிர்வரும் சனிக்கிழமை நியூஸிலாந்து புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***இலங்கை குழாம்***

சமரி அதபத்து (தலைவர்), ஹர்சிதா சமரவிக்ரம, விஷ்மி குணரத்ன, நிலக்ஷி டி சில்வா, கவீஷா டில்ஹாரி, அனுஷ்கா சஞ்சீவனி, மனுதி நாணயக்கார, இமேஷா துலானி, அச்சினி குலசூரிய, உதேசிகா பிரபோதனி, சச்சினி நிசன்சலா, கௌசானி நுத்யங்கனா, இனோசி பெர்னாண்டோ, சுகந்திகா குமாரி, ரஷ்மிகா செவ்வந்தி, சேத்தனா விமுக்தி

# அரை மரதனில் சாதனை படைத்த ஜேக்கப் கிப்லிமோ

பார்சிலோனாவில் நடைபெற்ற 2025 பார்சிலோனா அரை மரதன் ஓட்டத்தில் உகண்டாவைச் சேர்ந்த ஜேக்கப் கிப்லிமோ 56:42 நிமிடங்களில் ஓடிமுடித்து புதிய சாதனை படைத்தார்.



24 வயதான கிப்லிமோ, கடந்த ஆண்டு வலென்சியாவில் எத்தியோப்பியாவின் யோமிஃப் கெஜெல்சா அமைத்த 57:30 என்ற முந்தைய அரை மரதன் சாதனையை முறியடித்தார். அந்த நேரத்தில் கெஜெல்சா, கிப்லிமோவின் 2021 சாதனையை ஒரு வினாடி வித்தியாசத்தில் முறியடித்திருந்தார்.

தற்போது பார்சிலோனாவில், கிப்லிமோ, கெஜெல்சாவின் சாதனையை 48 வினாடிகள் வித்தியாசத்தில் முறியடித்தார். கிப்லிமோ சராசரியாக மணிக்கு 13.86 மைல்கள் அல்லது ஒவ்வொரு 04 நிமிடங்கள் 20 வினாடிகளுக்கும் ஒரு மைல் வேகத்தில் ஓடினார்.

கென்ய, நீண்ட தூர ஓட்டப்பந்தய வீரர் ஜெஃப்ரி கம்வோரர் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். கென்யாவைச் சேர்ந்த சாம்வெல் மைலு மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

கிழக்கு உகண்டாவின் கிராமப்புற மாவட்டமான க்வீனைச் சேர்ந்த விவசாயி மகன் கிப்லிமோ. இரண்டு முறை உலக கிராஸ் கண்ட்ரி சம்பியன் ஆவார். 2021ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள் 10,000 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

CHAMPIONS TROPHY 2025 - PAKISTAN

## இன்றைய போட்டி

குழு - A

இந்தியா VS பங்களாதேஷ்

INDIA AFGHANISTAN

டுபாய் - பி.ப. 2.30 மணி



***கட்டாரில் இயங்கும் புத்தளம் லயன்ஸ் உதைபந்தாட்டக் கழகத்தின் புதிய ஜேர்ஸி அறிமுக நிகழ்வும் கட்டாரில் நடைபெற்று முடிந்த கட்டார் ஸ்ரீ லங்கன் உதைபந்து சுற்றுப்போட்டியில் திறமைகளை வெளிப்படுத்திய புத்தளம் லயன்ஸ் வீரர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. கழகத்தின் ஸ்தாபகரும் பயிற்றுவிப்பாளருமான எஸ்.எம்.ஹக்கீம் மற்றும் முகாமையாளர் எம்.ஹம்மூத் ஆகியோரின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.***




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7